www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

CPI 100 Years
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
1925-2025

மலர் 88 | இதழ் 11 | 2025 ஜூன் 15 - ஜூன் 21 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15

### மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தை 200 நாட்களாக உயர்த்தக்கோரி

# வி.தொ.ச. மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்



**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்ட பணிக்கு ஆண்டுக்கு ரூபாய் 4.50 லட்சம் கோடி நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும், வேலை வழங்க முடியாத காலங்களில் சட்டப்படி வேலையின்மை கால நிவாரணம் வழங்க வேண்டும், 100 நாள் வேலையை 200 நாட்களாக உயர்த்த வேண்டும், விவசாய தொழிலாளர் நல வாரியத்தை மீண்டும் உருவாக்க வேண்டும், பட்டா இல்லாத குடும்பங்களுக்கு பட்டா வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் தமிழ்நாடு தழுவிய அளவில் ஆர்ப்பாட்டம் நடத்தியது.**

**பென்னாகரம்**

பென்னாகரத்தில் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு, சங்கத்தின் மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன் தலைமையில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினார். இதில் சிபிஐ மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.கோபால், பென்னாகரம் நகரப் பொறுப்பாளர் சரவணன், நகரத் துணைச் செயலாளர் வெள்ளதுரை, வட்டாரச் செயலாளர்கள் பாப்பாரப்பட்டி பெருமாள், சின்னம்பள்ளி வெங்கடேசன், விதொச வட்டாரச் செயலாளர்கள் பாப்பாரப்பட்டி முருகன், பென்னாகரம் காளியப்பன், சிவலிங்கம் பெண்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**நல்லம்பள்ளி**

நல்லம்பள்ளி வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு, நல்லம்பள்ளி வட்டாரச் செயலாளர் எம்.முருகேசன் தலைமை வகித்தார். இண்டூர் வட்டாரச் செயலாளர் எம்.மாதையன் முன்னிலை வகித்தார். ஏஐடியூசி மாநிலத் துணைத் தலைவர் கே.மணி, ஏஐஒய்எப் மாவட்டச் செயலாளர் எம்.நவீன்குமார், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்டச் செயலாளர் ஆர்.சுப்ரமணி ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினார்கள். இதில் விதொச மாநிலக் குழு உறுப்பினர் அலமேலு, வட்டாரத் தலைவர்கள் இண்டூர் முனுசாமி, நல்லம்பள்ளி கிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**தருமபுரி**

தருமபுரி வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாநிலக் குழு உறுப்பினர் சி.சிவன் தலைமை வகித்தார். கட்சி மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம், விதொச மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன்,

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

# பட்டினியில் மடியும் பாலஸ்தீனர்கள்

## பசியை ஆயுதமாக்கும் இஸ்ரேல்

காசாவில் வாழும் பாலஸ்தீனர்களுக்கு உணவு, தண்ணீர், மருந்துப் பொருட்கள் செல்லவிடாமல் இஸ்ரேல் தடுத்துள்ளது. ஐ.நா மனிதநேய உதவிகளையும் தடுத்து வருகிறது. இதனால் உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது.

இஸ்ரேல் நடத்தி வரும் இனப்படுகொலைப் போரால், பாலஸ்தீன மக்கள் அழிவின் விளிம்பில் உள்ளனர். இஸ்ரேலின் தாக்குதலில் வீடுகளை இழந்தனர். உறவுகளைப் பறிகொடுத்தனர். எஞ்சியவர்கள் உயிர் பிழைக்க காசா எங்கும் ஓடிக்கொண்டே இருக்கின்றனர்.

தற்போது போரால் பாதிக்கப்பட்ட காசா பகுதிக்கு உணவு, மருந்து, தண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் செல்ல விடாமல் இஸ்ரேல் தடுத்து வருகிறது. இதனால் பட்டினிக் கொடுமை தலைவிரித்தாடுகிறது. பசியால் குழந்தைகள் துடிக்கின்றனர். அதனை காணச் சகிக்காமல் பெற்றோர் கதறுகின்றனர்.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கை பசியையே "ஆயுதமாக்கும்'' செயல் என

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

## பொதுச்செயலாளர் டி.ராஜாவுடன் பாலஸ்தீன தூதர் சந்திப்பு




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகமான அஜாய் பவனுக்கு இந்தியாவுக்கான பாலஸ்தீன தூதர் அப்துல்லா அபு ஷாவேஷ் சென்றார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா, தேசியச் செயலாளர்கள் பல்லப் சென்குப்தா, ராமகிருஷ்ண பாண்டா ஆகியோர் வரவேற்றனர்.

பின்னர், இந்தியாவின் நீண்டகால வெளியுறவுக் கொள்கை மரபுக்கு ஏற்ப, பாலஸ்தீனத்திற்கு ஆதரவான பொதுக்கருத்தை வலுப்படுத்துவது குறித்து அவர்கள் விவாதித்தனர்.

இந்தச் சந்திப்பு, பாலஸ்தீன மக்களுடனும் அவர்களின் நியாயமான கோரிக்கைகளுடனும் கொண்டுள்ள ஒற்றுமை உணர்வை மீண்டும் உறுதிப்படுத்தியது.

### அமித்ஷாவின் பேராசை!

பா.ஜ.க கூட்டணி ஆட்சியை தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் ஏற்க மாட்டார்கள் என்பது மட்டுமல்ல அ.தி.மு.க தொண்டர்களும் ஒருபோதும் ஏற்க மாட்டார்கள் என்பது அமித்ஷாவிற்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் எடப்பாடியாருக்கு நன்றாகவே மிக நன்றாகவே தெரியும்.

தெரிந்து என்ன பயன்?


... பக்கம் 2

### தமிழர் தொன்மையை மறுக்கும் பா.ச.க.வின் முருகன் மாநாடு

அவர்களுடைய நோக்கமெல்லாம் முருகன், இந்து ஆகிய பெயர்கள் வைத்துக்கொண்டு, தமிழின மக்களைப் பிளவுபடுத்தி, வாக்கு வங்கியாக மாற்றவேண்டும் என்பதன்றி வேறில்லை.

... பக்கம் 3


### அமீனா புகுந்த வீடும் அமித்ஷா புதுப்பித்த கூட்டணியும்!



தேர்தல் வந்துவிட்டால்தான் கள்ளழகர், சொக்கநாதர், முருகன் எல்லாம் அவர் கண்களுக்குத் தெரிகிறார். மற்ற நேரங்களில் விநாயகர் ஊர்வலங்களும், கலவர யாத்திரைகளும்தான் அவர்களது அரசியல் நடவடிக்கை.

... பக்கம் 5

### நேசத்தைப் பரப்பும் குழு இன்றைய தேவை!



"பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் 90%க்கும் மேற்பட்டவை எதிர்கட்சித் தலைவர்களின் மீதுதான் தொடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் பாஜகவில் சேர்ந்துவிட்டால், வழக்குகள் உடனே கைவிடப்படுகின்றன."

... பக்கம் 7

### பாஜகவின் கைப்பாவையா தேர்தல் ஆணையம்?

2019 சட்டமன்றத் தேர்தலின் போது மகாராஷ்டிராவில் 8.98 கோடி வாக்காளர்கள் இருந்தனர். இது ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, 2024 மக்களவைத் தேர்தலின் போது 9.29 கோடியாக உயர்ந்தது. அடுத்து ஐந்தே மாதங்களில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின் போது 9.70 கோடி வாக்காளர்களாக அதிகரித்துள்ளது. அதாவது ஐந்து ஆண்டுகளில் 31 லட்சம் வாக்காளர்கள் கூடியுள்ளனர்.

... பக்கம் 8

கட்சிக் கடிதம்

# அமித்ஷாவின் பேராசை!



போர்க்குணமிக்க தோழர்களே!

**அகண்ட முகமும், கொடூரப் பார்வையும் கொண்ட ஒரு உயரமான தடித்த மனிதர் இருக்கின்றார்.**

அவர்தான் நாட்டின் அடுத்த பிரதமர் என ஆருடம் கூறுகின்றது. மோடியின் செல்வாக்கு மெல்ல மெல்ல சரியத் தொடங்கிய நிலையில், அடுத்த நபரைத் தயார் செய்கிறது ஆர்.எஸ்.எஸ்.

ஒன்றிய உள்துறை அமைச்சர் எத்தகைய அரசுப்பணிகளிலும் இன்றித் தனி விமானத்தில் மதுரை வந்தார்.

விமான நிலையத்தில் அவரை வரவேற்று மகிழ்விக்க பா.ஜ.க 10 பேரைத் தேர்வு செய்தது.

அவர்களில் ஒருவர் மிக மிக முக்கியமானவர், எல்லோரைக் காட்டிலும் சிறப்பு கவனத்திற்குரியவர், தமிழ்நாடு மட்டுமல்ல, ஆந்திராவிலும் புகழ்பெற்றவர். அவர் ஏராளமான அளப்பரியப் பதக்கங்களைப் பெற்றுள்ளார்.

ஆந்திரா, தெலங்கானா மாநிலங்களில் செம்மரக்கட்டைகளைக் கடத்திய வழக்கு. ஆந்திரா காவல்துறையால் பலமுறை கைது செய்யப்பட்டு குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்ட பெருமகனார்.

சில மாதங்களுக்கு முன்னர் ஆவடி காவல்துறையால் கைது செய்யப்பட்டு குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டார். ரவுடிகள் பட்டியலில் இடம் பெற்றுள்ள இவர் மீது 60 வழக்குகள் உள்ளனவாம்.

அவரது பெயர் மிளகாய் பொடி வெங்கடேசனாம், இவர் தமிழக பா.ஜ.கவின் ஓபிசி பிரிவு தலைவராம். இவர் இப்பதவியைப் பெற பல கோடிகளைச் செலவு செய்ததாகவும் ஏடுகள் தெரிவிக்கின்றன.


இத்தகைய மனிதர்தான் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை இன்முகம் காட்டி வாழ்த்தி வரவேற்றவர். 'இனம் இனத்தோடுதான் சேரும்' என்று நம்மூரில் ஓர் பழமொழி உண்டு.

தமிழகத்தில் பல கோடி மக்கள் தரிசிக்கும் மீனாட்சியம்மன் கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்தார். என்னை தரிசிக்க தறுதலைகளும் வரத்தான் செய்கின்றன, நான் என்ன செய்ய என்று மீனாட்சியம்மன் புலம்பித் தீர்த்தாளாம்.

ஒத்தக்கடையில் நடைபெற்ற அவரது கட்சியின் குண்டர்கள் கூட்டத்தில், தான் ஒரு ஒன்றிய அமைச்சர் என்பதனையும் மறந்து விட்டு, நாலாந்தர ரவுடிகள் பேசுவது போல் பேசியுள்ளார்.

பஹல்காம் தாக்குதலுக்குப் பதிலடி கொடுத்ததைக் கம்பீரமாகக் கூறியுள்ளார். அதில் ஏற்பட்ட பல்வேறு வினாக்களை நாடு எழுப்பிக் கொண்டுள்ளது. இன்று வரை மோடியோ அல்லது அமித்ஷாவோ பதில் அளிக்கத் தயாராக இல்லை. மாறாக ஒடிசாவில், அரியானாவில், மகாராஷ்டிராவில், டெல்லியில் ஆட்சியைக் கைப்பற்றி விட்டோம். அதுபோல் 2026 தேர்தலில் தமிழ்நாட்டைக் கைப்பற்றுவோம்!

தமிழ்நாட்டில் என்.டி.ஏ கூட்டணி ஆட்சியா? அ.தி.மு.க தலைமையிலான ஆட்சியா என்பது குறித்து எடப்பாடி வாய் திறக்கவில்லை. பாவம் எடப்பாடி அவர் என்ன செய்வார்?



அமித்ஷா கூறுவதற்கெல்லாம் ஆமாம் சாமி போடுவதைத் தவிர வேறு வழியில்லாமல் விழி பிதுங்கி நிற்கின்றார்!

டெல்லிக்குப் பெரிய வலையை எடுத்துக் கொண்டு வந்தார் எடப்பாடி ஒரு மீனும் அகப்படவில்லை. வெறுங்கையோடு திரும்பிச் சென்கின்ற விரக்தியில் தி.மு.கவைக் கடுமையாகச் சாடிச் சென்று இருக்கின்றார்.

திமுக ஆட்சியை அகற்றியே தீர வேண்டும், அகற்றுவோம் என்று பேசி உள்ளார். திமுக ஆட்சியை அகற்றிவிட்டு அவ்விடத்தில் பா.ஜ.க கூட்டணி ஆட்சி அமைய வேண்டும் என்பது அமித்ஷாவின் பேராசை!

பா.ஜ.க கூட்டணி ஆட்சியை தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் ஏற்க மாட்டார்கள் என்பது மட்டுமல்ல அ.தி.மு.க தொண்டர்களும் ஒருபோதும் ஏற்க மாட்டார்கள் என்பது அமித்ஷாவிற்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் எடப்பாடியாருக்கு நன்றாகவே மிக நன்றாகவே தெரியும்.

தெரிந்து என்ன பயன்? அமித்ஷா அரசியல் ரீதியாக தமிழ்நாட்டில் ஓர் அணியை உருவாக்கிட இயலாது. ஆதலால் அரசியலைக் கைவிட்டு விட்டு தனக்குள்ள ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி மிரட்டிப் பணிய வைக்க முயல்கின்றார்.

அமலாக்கத்துறை போன்ற அமைப்புகளை பா.ஜ.கவின் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துகின்றார்கள். நயவஞ்சகமாகப் பேசிப் பார்ப்பது, பணியவில்லை என்றால் அமலாக்கத் துறையை ஏவி விடுவது! இதனைத் தான் டெல்லி உட்பட பல மாநிலங்களில் இவர்கள் மேற்கொள்ளும் உத்தியாகும்!

இத்தகைய கீழ்த்தரமான உத்திக்கு அறிந்தோ அறியாமலோ எடப்பாடி பலியாகிவிட்டார். பலியாகிவிட்ட பழனிச்சாமி போன்றே மற்றவர்களும் பணிவார்கள், பணிந்து விடுவார்கள் என்ற எதிர்பார்ப்போடு வலையோடு வந்த அமித்ஷா வலையறுந்து சென்றுள்ளார்.

பா.ஜ.கவின் அரசியல் தூதர் ஒருவர் தமிழ்நாட்டில் இருக்கின்றார். அந்த ஆடிட்டர் மூலமாக ஒவ்வொரு கட்சிக்கும் தூது விடப்படுகின்றது என்பது ரகசியமல்ல.

பாமக என்கிற அரசியல் கட்சி தொடங்கப்படுவதற்கு முன்பு அக்கட்சியின் நிறுவனர் மருத்துவர் இராமதாஸ் வன்னியர் சங்கம் என்று தொடங்கி, சமூகத்தில் பின்தங்கிய பகுதியினராக உள்ள வன்னியப் பெருமக்களைச் சாதி ரீதியாக அணிதிரட்ட முயன்றார். மக்களின் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்துப் போராடவும் செய்தார்.

மருத்துவருக்கு ஓர் ஆசை பிறந்தது. அந்த ஆசைதான் அரசியல் கட்சி தொடங்க வேண்டும் என்கிற ஆசை, அத்தகைய ஆசையை நிறைவேற்றும் பொருட்டாக பா.ம.க என்கிற கட்சியைத் தொடங்கினார். அவ்வாறு தொடங்கும் போது ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டார். நானோ, எனது மகனோ, எனது குடும்பமோ எந்தப் பொறுப்பிற்கும் வரமாட்டோம் இது சத்தியம் என்றார். அச்சத்தியம் என்னானது? என்பது குறித்து எழுதிட வேண்டிய அவசியம் இல்லை.

சத்தியம் செய்தது மட்டுமல்ல, சத்தியத்தை மீறி நானோ, எனது குடும்பத்தாரோ பதவிக்கு வந்தால் முச்சந்தியில் நிறுத்தி சவுக்கால் அடியுங்கள் என்றும் கூறினார் என்பதும் நினைவிற்கு வந்து தொலைக்கின்றது

இப்போது கூறுகின்றார், நான் தவறு செய்துவிட்டேன், 35 வயதில் மகனுக்கு ஒன்றிய அமைச்சர் பதவியைப் பெற்றுக் கொடுத்தது தவறு என்று கூறுகின்றார். தந்தைக்கும் மகனுக்கும் நடக்கும் மல்யுத்தத்தில் யார் வெற்றி பெறப் போகின்றார்கள்? என்பது ஒரு புறம் இருக்க ஏன் இந்த யுத்தம்? கொள்கை யுத்தமா அல்லது வேறு காரணங்களுக்காக நடைபெறும் யுத்தமா?

கத்தரிக்காய் முற்றினால் கடை வீதிக்கு வந்துதானே தீரும்! வரும் வரை காத்திருக்கலாம்! இங்கே ஆடிட்டருக்கு என்ன வேலை? யாரின் தூதர்? யாருக்கான தூதர்? இதில் ஒன்றும் ரகசியம் இல்லை! அமித்ஷா அவரது சார்பில் தூதுக்கள் என்று எது நடந்தாலும் மிரட்டல் உருட்டல் என்று எதுவானாலும் அவை பா.ஜ.கவிற்குக் கை கொடுக்காது!

அமித்ஷா ஒரு முறை அல்ல, மாதம் ஒரு முறை அல்ல, நாள்தோறும் தமிழ்நாட்டிற்கு வந்து குட்டிக் கரணங்கள் பல போட்டாலும் கால் முட்டிதான் உடைபடும்!

ஆட்சிக்கு வருவோம் என்ற அமித்ஷாவின் பேராசை, நிறைவேறாது! வகுப்புவாத வெறி பிடித்து அலையும் ஆர்.எஸ்.எஸ் கும்பலுக்கு தமிழ்நாட்டில் இடம் இல்லை, ஒரு போதும் இடமில்லை. அவர்களுக்கு மட்டுமல்ல, அவர்களோடு யார் சேர்ந்தாலும் அவர்களுக்கும் அதே கதிதான் என்பதனை மீண்டும் நிலைநாட்டி நிரூபிப்போம்.

மீண்டும் சந்திப்போம்

வணக்கம்

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)

மாநிலச் செயலாளர்

## கிரெட்டாவுக்கு ஆதரவாக பிரான்ஸ் மக்கள் போராட்டம்




காசாவிற்கு உணவுப்பொருட்கள் கொண்டு சென்ற கப்பலில் இருந்த கிரெட்டா தன்பெர்க் உள்ளிட்ட 12 பேர்களை இஸ்ரேல் துப்பாக்கி முனையில் கடத்தியது. பிறகு அவர்களை கைது செய்துள்ளதாகவும் அவரவர் நாட்டிற்கு அனுப்புவதாகவும் தெரிவித்திருந்தது. இந்நிலையில் தன்பெர்க்கை பிரான்ஸ் மூலமாக அனுப்ப திட்டமிட்டது. அவரை சிறையில் அடைத்து விடக்கூடாது என்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள், பிரான்ஸ் தலைநகர் பாரீசில் போராட்டம் நடத்தினர். இந்நிலையில் கிரெட்டா அவரது நாட்டு க்கு அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழர் தொன்மையை மறுக்கும் பா.ச.க.வின் முருகன் மாநாடு



மே.து.ரா.

**முயற்சிகள் பலவற்றை முன்னெடுத்து முடக்கம் கண்ட பாரதிய சனதாக் கட்சி இப்போது தமிழ்க் கடவுள் முருகனை முன்னிறுத்தி முன்னேற்றம் காணத் துடிக்கிறது.**

முருக பக்தர்கள் மாநாடு என்ற பெயரோடு மதுரையில் சூன் 22ஆம் நாள் இந்து முன்னணியுடன் இணைந்து பா.ச.க. மக்களைத் திரட்டிக் காட்ட முடியும் என நம்புகிறது. முருகனின் ஆறுபடை வீடுகளைப் போன்று கோயில்களை அமைத்து, அங்கு வழிபாடுகளை நடத்தவும் விபூதி போன்றவற்றை வழங்கவும் ஏற்பாடுகள் நடந்துவருகின்றன.

பக்தி, நம்பிக்கை, வழிபாடு என்ற நிலைகளுக்கு அப்பால் முருகன் தொடர்பான சொற்பொழிவுகள் நடத்தப்படலாம். ஆனால், கருத்தரங்கம், ஆய்வரங்கம் ஆகியவற்றை எதிர்நோக்கிக் கட்டுரைகள் அல்லது ஆய்வுகள் பெறப்பட்ட விவரங்களும் இதுவரை வெளியாகவில்லை.

செல்வவளத்தால் மக்களை வண்டிகளில் அழைத்துவந்து காட்டி, ‘இந்துக்களாகிய தமிழர்கள்’ தங்கள் பக்கம் இருக்கிறார்கள் என்று வெளியுலகை நம்பவைக்க முடியும் எனப் பா.ச.க. நினைக்கிறது.

### முருக வழிபாட்டை ஏற்காதோர்

முருக வழிபாட்டோடு எத்தகைய தொடர்புமில்லாத, இன்னும் சொல்லப்போனால் முருக வழிபாட்டில் இதுவரை ஈடுபடாத உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத், ஆந்திரத் துணை முதல்வர் பவன் கல்யாண் போன்றோர் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருப்பது, இது கடவுள் நம்பிக்கை தொடர்பான கூடுதல் அல்ல என்பதை உறுதிப்படுத்திவிடுகிறது.

முருக வழிபாட்டை ஏற்காத ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் அமித்சா அண்மையில் மதுரையில் பேசியபோது, இந்த இந்து மாநாட்டினைப் பெரும் வெற்றி பெறச் செய்யவேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கிறார்.

சனாதனத்தைப் போற்றும் யோகியும், அதனைக் காக்க வலிந்து நிற்கும் பவன் கல்யாண் போன்றோரும், சனாதனியாகவே வலம் வரும் அமித்சாவும் இந்த முருக பக்தர்கள் மாநாட்டை முன்னிறுத்துகிறார்கள் என்பதே பொருத்தமாகத் தெரியவில்லை.

### தோல்வி கண்ட முந்தைய முயற்சிகள்

தமிழ்நாட்டு அரசியலில் முருகனை முன்னெடுத்து மக்களைத் திரட்டிவிடலாம் என்ற எண்ணத்தில் வீரத்தமிழர் முன்னணி என்ற துணை அமைப்பை 2015ஆம் ஆண்டிலேயே சீமான் தொடங்கிவிட்டார். தமிழ்த் தேசியம் பேசும் சீமான், 2016ஆம் ஆண்டிலிருந்து வேல் வழிபாடாகத் தைப்பூச நாளில் விழாக்களை நடத்தி வந்தாலும், முருக வழிபாட்டாளர்களின் ஈர்ப்பினை அவரால் பெற இயலவில்லை. கடவுள் நம்பிக்கையினை அரசியலாக்குவதைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

சனாதனக் கருத்துக்களையும் உள்ளடக்கியிருக்கின்ற முருகனைப் பாடும் கந்த சச்டிக் கவசத்தினைக் கருப்பர் கூட்டம் என்ற யுடியூப் வலைதளம் இழிவுபடுத்திவிட்டதாக 2020இல் பா.ச.க. கூக்குரல் எழுப்பியபோதுதான், அவர்களுக்கு முருகன் நினைவே வந்தது எனலாம். அதற்கு முன் அவர்கள் அயோத்தி ராமனைத்தான் பிடித்துக்கொண்டிருந்தார்கள்.

இதனையடுத்து, வட தமிழகத்திலுள்ள திருத்தணியில் தொடங்கி, தென்பகுதியில் உள்ள திருச்செந்தூர் வரை வேல் பயணம் மேற்கொள்ள அப்போதைய பா.ச.க. மாநிலத் தலைவர் முருகன் முயன்றார். முருக வழிபாட்டாளர்கள் எவரும் இதனைக் கண்டுகொள்ளவில்லை. பா.ச.க.வும் இதனால் பயனடையவில்லை.


அடுத்து, அண்மையில் திருப்பரங்குன்றத்தை முசுலிம் மக்களிடமிருந்து மீட்பதாகப் பா.ச.க.வினர் நடத்திய போராட்டம் உள்ளூர் மக்களையும் முருக வழிபாட்டாளர்களையும் கவரவில்லை. வெளியூரிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்களை அழைத்துவந்து காட்டியிருந்தாலும், வேண்டிய தாக்கத்தை அது தரவில்லை.

தமிழக மக்கள் இதுவரை பெரிதும் அறியாத ‘சிக்கந்தர் மலை’ என்ற பெயர் திருப்பரங்குன்றத்துக்குத் தரப்பட்டிருப்பதாகப் பரப்புரை செய்து பார்த்தார்கள். இந்துக்களின் மலை பறிபோய்விட்டதாகப் புலம்பினார்கள். அப்படியொரு பெயரையே கேள்விப்பட்டிராத தமிழக மக்கள் பா.ச.க.வினரின் கூற்றுக்களை நம்பவுமில்லை, ஏற்றுக்கொள்ளவுமில்லை.

தமிழ்நாட்டில் முருகனை வழிபடுவோர் இவற்றையெல்லாம் கண்டுகொள்ளவே இல்லை.

இந்த நிலையில்தான், தற்போது முருக பக்தர்கள் மாநாட்டுக்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. முருக வழிபாட்டாளர்கள் நடத்தும் மாநாடு என்று கூறிக்கொண்டாலும், இந்து முன்னணி, பா.ச.க. போன்றோரின் பங்கெடுப்புடன், இந்து சமயம் என்ற பெயரில் மக்களைக் கவர்வதற்கான ஏற்பாடுதான் இது என்பதை எவரும் மறைத்துப் பேசவில்லை. அவர்களுடைய நோக்கமெல்லாம் முருகன், இந்து ஆகிய பெயர்கள் வைத்துக்கொண்டு, தமிழின மக்களைப் பிளவுபடுத்தி, வாக்கு வங்கியாக மாற்றவேண்டும் என்பதன்றி வேறில்லை.

### நம்பிக்கை வேறு அரசியல் வேறு



உள்ளூர் கோயில்களில் குடமுழுக்கு என்றால் பல்லாயிரத்தில் மக்கள் கூடுவதும், பெரும் கோயில்கள் என்றால் லட்சக் கணக்கில் மக்கள் திரள்வதும் இயல்பாகவே தமிழ்நாட்டில் இருந்துவருவதுதான். உண்மையான நம்பிக்கையின் அடிப்படையில் தாமாகச் சேரும் கூட்டங்கள் அவை என்பதை மறுக்க முடியாது. தங்களது வழிபாட்டிடங்களில் நடைபெறும் திருவிழாக்களில், சுற்றுப்புற மக்கள் பெருமளவில் கலந்துகொள்கிறார்கள். வழிபாடு மட்டுமல்லாமல், விழா நிகழ்வுகளிலும் கொண்டாட்டங்களிலும் இல்லத்தினரோடு சுற்றத்தினரும் கூடி மகிழ்வது ஒரு வழமையாகவே நெடுங்காலமாக உள்ளது.

இத்தகைய வழிபாட்டுவழி விழாக்களை அரசியலாக்கும் நடைமுறை தமிழ்நாட்டில் முழுமையாக இல்லை என்றே கூறமுடியும்.

வள நிலப் பகுதிகளில் சைவர், வைணவர் என்ற குறியீடுகள் நிலவினாலும், சாதியப் பின்னணியே வரலாற்றளவில் நிலைகொண்டிருந்தது என்பதை மறுப்பதற்கில்லை.

### சனாதனத்தை ஏற்காத தமிழர்

பண்டைத் தமிழ்ப் பாடல்களில் பரவலாகக் குறிக்கப்படும் வேலன், குறிஞ்சித் தலைவனாக மட்டுமல்லாமல், தமிழர்களது தனித்தவழிபடும் கடவுளாகவும் கருதப்பட்டிருப்பதைக் காணலாம். அறுபடை வீடுகள் அமைந்திருக்கின்ற நிலப்பகுதிகளே இவற்றுக்குச் சான்றாக உள்ளன.

பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகியவற்றிலும் வேலன் வழிபாடு சிறப்பிக்கப்படுகிறது. திருப்பரங்குன்றத்திற்குச் செல்வோர் தங்களது வழிபாட்டு முறைகளையே பின்பற்றினர். அவை பார்ப்பன வழிபாட்டு முறைகளாக இருக்கவில்லை.

கோவலன், கண்ணகியோடு கவுந்தியடிகள் மதுரையை நோக்கிச் செல்லும் வழியில், மாடலமறையோன் என்னும் பார்ப்பனன், தான் சார்ந்த வழிபாட்டு முறைகளைப் பரிந்துரைத்தபோது, ‘உன் வழியில் நீ போ, எங்கள் வழியில் நாங்கள் செல்கிறோம்’ என்று கவுந்தியடிகள் மறுத்துரைக்கிறார்.

இந்தப்பின்புலத்தை மறந்துவிடக்கூடாது. இதன் தொடர்ச்சியைத் தமிழக வரலாறு முழுமையும் காணலாம்.

நிலவுடைமையாளர்களின் மேன்மையில் எழுந்த பக்தி இயக்கக் காலத்தில், சிவனும் திருமாலும் போற்றப்பட்ட சூழ்நிலையில், முருகனது சிறப்பு அல்லது பெருமை பெரிதும் பாடப்படவில்லை. சிவனது மகனாக மட்டுமே சில இடங்களில் முருகனைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன. அப்போது முருகனைப் பற்றிய தனித்த இலக்கியங்களும் தோன்றவில்லை.

இந்த நிலையிலும், சோழர் காலத்தில் கோயில்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து, தவறு செய்த பார்ப்பனர்களைத் தண்டிக்கச் சோழ மன்னர்கள் தயங்கவில்லை.

### எளியோர் வழிபடும் முருகன்

நிலவுடைமை அமைப்பின் வழிபாட்டு முறைமைகளாகச் சைவமும் வைணவமும் மேலெழுந்தபோது, முருகன் மற்றும் குலக் கடவுள்கள் தொடர்ந்து பெரும்பான்மையாக இருந்த எளிய மக்களின் வழிபாட்டில் இருந்துவந்திருப்பதைக் காணமுடிகிறது.

தங்களைக் கீழ்ப்படியவைத்த உடைமையாளரின் மேலாண்மையை ஏற்றுக்கொள்ளாத போக்குகள், முருகன் மற்றும் குலக் கடவுளரை வழிபட்டோர் மனதில் நீடித்திருந்தன.

நிறுவன வயப்பட்ட கடவுள் நம்பிக்கைகளுக்கும் போக்குகளுக்கும் எதிரான குரல்கள் தமிழ்நாட்டில் பன்னெடுங்காலமாக வழிமுறையாகத் தொடர்ந்தன என்பதில் அய்யமில்லை. சித்தர்களது பாடல்களில் இத்தகைய குரல்கள் வெளிப்படையாகவே இடம்பெற்றுள்ளன.

வைதீக மரபுகளுடன் முருகன் இணைக்கப்பட்டு, கந்தன், சுப்பிரமணியன் என்பன போன்ற பெயர்களைப் பெற்றிருந்தாலும், எளிய மக்களின் வழிபாட்டு முறைமைகளான காவடி எடுத்தல், நடந்து சென்று முருகனை வழிபடுதல் ஆகிய வேற்று வடிவங்கள் தொடர்ந்துகொண்டிருந்தன.

தமிழ்நாட்டில், நிலவுடைமையாளர்களின் ஏற்பாடுகளில், ஊரகப் பகுதிகளில்கூடப்

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்

### பதில் கூற முடியுமா?

மக்களிடம் பக்தி உணர்வுகளை ஏற்படுத்துவது, முருக பக்தர்கள் மாநாட்டின் நோக்கமாக இருக்கவில்லை. மாறாக பக்திக்கும் வெளியே, கசப்புணர்வுகளை ஊட்டிக் கவரும் எண்ணம்தான் மேலோங்கி நிற்கிறது. கீழ்க்கண்ட வினாக்களுக்கு பா.ச.க.வினர் முதலில் விளக்கம் தரவேண்டும்:

1. முருகனைத் தமிழ்க் கடவுளாகப் பா.ச.க.வினர் ஏற்கிறார்களா?
2. அகழ்வுகளில் அறியப்படும் பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் காலம் கி.மு. 3,300 வரை பழமை வாய்ந்தது என்பதை ஒப்புகிறார்களா?
3. முருகனுக்கும் இந்துச் சமயத்துக்கும் தொடர்பில்லை என்பதை ஏற்கிறார்களா?
4. சனாதனக் கொள்கைகளுக்கு மாறான எளிய மக்களின் முருக வழிபாட்டு முறைமைகளை நம்புகிறார்களா?
5. அயோத்தி ராமனது அறிமுகத்துக்கு முன்னதாக முருக வழிபாடு தமிழ்நாட்டில் இருந்தது என்பது ஏற்கிறார்களா?
6. தமிழ்நாட்டில் பல்வேறு ஊர்களில் முருக பக்தர்கள் அவர்களுக்கென்று உள்ளூர் அமைப்புகளை உருவாக்கி முருகனை வழிபடும் வழக்கத்தையும் வழிநடைப் பயணம் செல்வதையும் மேற்கொண்டு வருகின்றனர். இந்த அமைப்புகளை ஒன்றிணைத்து, அவர்கள் சார்பாக இந்த முருக பக்தர்கள் மாநாடு நடைபெறுகிறதா?
7. முருக பக்தர்கள் மாநாட்டில் பா.ச.க.வினரின் தலையீடு ஏன் இருந்துவருகிறது?

இன்னும் வினாக்கள் பல உள்ளன. இப்போதைக்கு இவை.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 88 இதழ் 11

## விஜய் மல்லையாவின் விளையாட்டு

ஓடிப்போன விஜய் மல்லையா, பாட்காஸ்ட் வழியாகத் தந்துள்ள நீண்ட பேட்டி, இந்தியாவின் அரசியல், பொருளாதாரத் தளத்தில் ஒரு விவாதத்தை எழுப்பி இருக்கிறது.

தன்னை வங்கிகளும் இந்திய அரசும் கடுமையாகச் சித்திரவதை செய்வதாக அவர் கூறியிருக்கிறார். 2017 கடன் மீட்புத் தீர்ப்பாயத்தில் தனக்கு 6,848 கோடி ரூபாய் கடன் இருப்பதாகத் தீர்ப்பானதாகவும், தனது சொத்துக்களில் இருந்து இந்திய அரசு 14 ஆயிரம் கோடி ரூபாய்களை எடுத்து இருப்பதாகவும், தனது கடன் தொகைக்கு மேல் அதிகத் தொகையைச் செலுத்தி விட்டதாகவும், அதற்குப் பின்னும் 7000 கோடி ரூபாய் பாக்கி இருப்பதாக வங்கிகள் கூறுவதாகவும், தனக்கு மட்டும் இவ்வாறு அநீதி இழைக்கப்படுவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

2017ல் ஒரு கடன் தொகை இருந்தால், அதற்கப்புறம் எட்டு ஆண்டுகளில், வட்டியும் தண்டனைத் தொகைகளும் சேர்ந்து கொண்டே வரும் என்பது தெரியாத அப்பாவி போல அவர் பேசியிருக்கிறார்.

இந்தியாவில் நிறுவனங்களை நடத்துவதில் அதிகார வர்க்க, அரசியல் செல்வாக்கு மிகுந்து விட்டது, இனி இங்கு தொழில் நடத்த முடியாது என்றும் கூறியிருக்கிறார்.

இவர் ஒன்றும் அரசியல் அறியாதவரும் அல்ல. 2002 முதல் 2008 வரை மதச்சார்பற்ற ஜனதா தளம் மற்றும் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் ஆதரவிலும், மீண்டும் 2010ல் மதச்சார்பற்ற ஜனதாதளம் மற்றும் பாஜக ஆதரவிலும் சுயேட்சையாகப் போட்டியிட்டு வென்று நாடாளுமன்ற மக்கள் மாநிலங்களவை உறுப்பினரானவர்.

கார்ப்பரேட்டுகளுக்குக் கட்சியாவது, சித்தாந்தமாவது, அதிகாரத்துக்கு வர அவை ஒரு வாகனம் மட்டுமே!

வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்தாதவர் மட்டுமல்ல, வாங்கிய கடனை வெளிநாட்டுகளுக்கு அனுப்பி, பண மோசடி வழக்குகளில் சிக்கியவர். இதனால் அவரை நாடாளுமன்ற உறுப்பினர் பொறுப்பில் இருந்து நீக்குவதற்கு ஒரு நாள் முன்னதாக 2016 மே 2 ஆம் தேதி, இங்கிலாந்துக்குப் பறந்து சென்று விட்டார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் 2016 ஏப்ரல் 24 ஆம் தேதியே அவரது பாஸ்போர்ட் முடக்கப்பட்டது. 2016 மார்ச் 13ஆம் தேதி அன்று அவரைப் பிணையில் வர முடியாத குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யுமாறு ஐதராபாத் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன் பின்னரும் அவர் வெளிநாட்டுக்குச் செல்ல முடிந்தது. 2018ல் அவர் தந்த ஒரு பேட்டியில், ஆளுங்கட்சிக்கு நான் ஒரு மிகப்பெரிய தொகையைக் கொடுத்தேன், அதன் பின்புதான் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்பட்டேன் என்றும் சொன்னார்.

அவர் லண்டனில் சென்று இறங்கியதற்குப் பின்பு, அவர் வெளிநாட்டுக்குச் செல்லக் கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுதான் விந்தை!

தனக்கு மட்டும் நெருக்கடி கொடுப்பதாகவும் இன்னும் பிறருக்குப் பல சலுகைகள் தருவதாகவும் அவர் கூறும் குற்றச்சாட்டிலும் உண்மை இருக்கிறது.

திருப்பிச் செலுத்தப்படாத கடனுள்ள நிறுவனங்களை, குறைந்த விலையில் விற்று கடனை ஈடு கட்டுவதற்கு, 'ஹேர் கட்' என்று அரசு பெயர் வைத்திருக்கிறது. இதற்கெல்லாம் சமஸ்கிருதப் பெயர் இல்லை!

62 ஆயிரம் கோடி ரூபாய் கடனுள்ள 10 நிறுவனங்களை, அதானி வெறும் 16 ஆயிரம் கோடி கொடுத்து வாங்கிக் கொண்டார். 74% 'ஹேர் கட்'. அரசும் வங்கிகளும் மறைத்து வைக்கிற, இதுபோன்ற இன்னும் ஏராளமான விவரங்களை அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் பகிரங்கமாக வெளியிட்டுள்ளது.

தன்னை இந்தியாவுக்கு அனுப்பக் கூடாது என்று விஜய் மல்லையா இங்கிலாந்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். அந்தக் கோரிக்கையை 2020ல் நீதிமன்றம் நிராகரித்தது. ஆனாலும் இன்று வரை இங்கிலாந்தில் இருக்கிறார்.

அவர் இந்தியாவுக்கு வர வேண்டுமானால், அவரை மரியாதையோடு நடத்த வேண்டும், விசாரணை மன்றமும் சிறைச்சாலையும் என்ன சூழலில் இருக்கும் என்பதற்கான சட்டபூர்வமான உத்தரவாதத்தை இந்திய அரசு தர வேண்டும் என்கிறார்.

குற்றமற்றவரெனில், மிகச் சிறந்த வழக்கறிஞர்களை வைத்து இந்தியாவுக்கு வந்து வாதாடி நிரூபிக்க வேண்டியதுதானே!

கடன் வாங்கிக் கட்டிய நிறுவனம் நஷ்டம் அடைந்தால், கடன் வாங்கியவன் பொறுப்பல்ல என்பது பெரும் முதலாளிகளுக்காக இந்தியா இயற்றி வைத்திருக்கும் சட்டம். இதை வைத்து அவர்கள் விளையாடுகிறார்கள்.

வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறுகிறவர்களை கிரிமினல் குற்றவாளிகள் என அறிவித்து, அவர்களது சொத்துக்கள் அனைத்தையும் கையகப்படுத்த உரிய சட்டம் இயற்றப்பட வேண்டும்.

### தமிழர் தொன்மை வரலாற்றை ஏற்க மறுக்கும்

## ஒன்றிய அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத்துக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

தமிழர் தொன்மை வரலாற்றையும், மதச்சார்பற்ற மரபையும் ஏற்க மறுக்கும் ஒன்றிய அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத் கருத்துக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முழுவதும் நடந்து வரும் அகழாய்வும், ஆராய்ச்சியும் தமிழர்களின் வரலாறு, பண்பாடு, கலாச்சார மரபுகளின் தொன்மைச் சிறப்பைத் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறது. 2015 முதல் இதுவரை ஐந்து கட்டங்களாக அகழாய்வு செய்யப்பட்ட கீழடி ஆய்வில் கிடைத்துள்ள ஆறாயிரத்துக்கும் அதிகமான தொல்லியல் சான்றுகள், தமிழர்கள் மற்றும் தென்னிந்திய மக்களிடம் நிலவி வந்த மதச்சார்பற்ற கலாச்சாரத்தை மறுக்க முடியாத அளவில் அறிவியல் ஆதாரங்களை முன்வைத்துள்ளது. கீழடி ஆய்வுக்குத் தலைமை ஏற்ற இயக்குநர் அமர்நாத் ராமகிருஷ்ணா பல அறிக்கைகளைத் தந்து உறுதி செய்துள்ளார்.

இதுவரை கிடைத்த தரவுகள் படி, கி.மு.800 க்கு முந்தைய காலத்தில் குடியிருப்புப் பகுதி இருந்ததை அறிவியல் சோதனை மூலம் உறுதி செய்யப்பட்டது. நீண்ட நெடுங்காலம் முன்பு இருந்த விலங்குகளின் எச்சமாக எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டு, அறிவியல் பூர்வமாக அதன் காலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவைகளை எல்லாம் ஏற்று, இன்னும் புதுப்புது தொல்பொருள் ஆய்வு மையங்களை அமைத்துத் தொன்மை வரலாற்றை, எதிர்கால தலைமுறைக்குக் கையளித்துச் செல்வது நாகரிகச் சமூகத்தின் கடமை. தொல்லியல் ஆய்வறிஞர் அமர்நாத் ராமகிருஷ்ணா, தனது குழுவின் கண்டுபிடிப்புகள் ஒவ்வொன்றையும் எல்லாச் சோதனைகளையும் தாண்டி நிலை நிறுத்தியுள்ளார்.



சனாதனவாதிகளும், புனைவுப் புரட்டர்களும் தமிழர் தொன்மை வரலாற்றை மூடி மறைத்து வந்த சதிச் செயல்கள் வெளிப்பட்டு வருவதால் ஆதிக்க வர்க்கம் பதற்றமடைந்து வருகிறது.

ஒன்றியக் கலாச்சாரத்துறை அமைச்சர் செகாவத், கீழடி ஆய்வில் கண்டறிந்த தரவுகளுக்கு அறிவியல் ஆதாரம் இல்லை எனக் கூறுவது தமிழர் தொன்மை வரலாற்றை மறுக்கும் வன்மத்துடன் அணுகும் செயலாகும். சர்வதேச ஆய்வறிஞர்கள் பலர் உறுதி செய்துள்ள திராவிட, தமிழர் நாகரிகம் தொன்மை நாகரிகம் என்பது நாள்தோறும் உறுதிப்பட்டு வருகிறது. இதனை வரலாறு உறுதி செய்து தீர்ப்பெழுதும் போது, வரலாற்றைத் திரித்துக் கூறிய கருத்துகள் குப்பைத் தொட்டியில் தூக்கி எறியப்படும் என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## கட்டாயக் கல்வி உரிமை சட்டத்தின்கீழ் தமிழகத்துக்கு நிதி வழங்க வேண்டும்

### ஒன்றிய அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

கட்டாயக் கல்வி உரிமைச்சட்டத்தின் கீழ் தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நிதியை சட்டரீதியாக வழங்கி கடமையை ஆற்ற வேண்டுமென ஒன்றிய அரசுக்கு உத்தரவிட்டுள்ள சென்னை உயர் நீதிமன்றம், சமக்ர சிக்க்ஷா திட்டத்தில் இருந்து இந்த நிதியை நீக்குவது குறித்து பரிசீலிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளது.

கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் தனியார் பள்ளிகளில் ஏழை, எளிய மாணவர்களுக்கு 25 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. ஆனால் இந்த ஒதுக்கீட்டின் கீழ் இந்தாண்டுக்கான மாணவர் சேர்க்கை இதுவரை தொடங்கப்படவில்லை எனக்கூறி, கோவையைச் சேர்ந்த மறுமலர்ச்சி இயக்கம் அமைப்பின் நிர்வாகியான வே.ஈஸ்வரன், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணை கடந்த மாதம் நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், வி.லட்சுமி நாராயணன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நடந்தது. அப்போது தமிழக அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன், ''கட்டாயக்கல்வி சட்டத்தின் கீழ் தமிழகத்துக்கு ஒதுக்க வேண்டிய நிதியை மத்திய அரசு இதுவரை வழங்கவில்லை. கடந்த 2021 முதல் 2023 வரை மத்திய அரசு நிதி ஒதுக்காத நிலையிலும் தமிழக அரசு தனது பங்களிப்பு நிதியைக் கொண்டு சமாளித்தது. தற்போது சமக்ர சிக்க்ஷா திட்டத்தின் கீழ் தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நிதியை வழங்க உத்தரவிடக் கோரி தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது'' என்றார்.

அப்போது ஒன்றிய அரசின் தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன், ''மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கை உள்ளிட்ட திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசு கையெழுத்திடவில்லை என்பதால் கட்டாயக்கல்வி சட்டத்தின் கீழ் 25 சதவீத இடஒதுக்கீட்டுக்கான தொகை ஒதுக்கப்படவில்லை'' என தெரிவித்தார்.

இந்த வழக்கில் நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், வி.லட்சுமி நாராயணன் ஆகியோர் அடங்கிய அமர்வு ஜூன் 10 ஆம் தேதி பிறப்பித்த தனது உத்தரவில் கூறியிருப்பதாவது:

கட்டாயக்கல்வி உரிமைச்சட்டத்தின் நோக்கமே அனைத்து தரப்பு மக்களுக்கும் தரமான கல்வி தடையின்றி சென்றடைய வேண்டும் என்பதுதான். எனவே கட்டாயக் கல்வி உரிமைச்சட்டத்தின் கீழ் தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நிதியை ஒதுக்கி, மத்திய அரசு தனது கடமையை நிறைவேற்ற வேண்டும். கட்டாயக் கல்வி உரிமைச்சட்டத்தை அமல்படுத்தும் பொறுப்பு மத்திய, மாநில அரசுகளுக்கு உள்ளது.

கட்டாயக்கல்வி சட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய நிதியை தேசிய கல்விக் கொள்கை மற்றும் சமக்ர சிக்க்ஷா திட்டத்துடன் இணைக்க எந்த அவசியமும் இல்லை. சமக்ர சிக்க்ஷா திட்டத்தின் கீழ் தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நிதியை உடனடியாக வழங்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மாநில அரசு வழக்கு தொடர்ந்துள்ள நிலையில் அதுதொடர்பாக எந்த உத்தரவையும் பிறப்பிக்கவில்லை.

2024–25ம் நிதியாண்டில் சமக்ர சிக்க்ஷா திட்டத்தின் கீழ் தமிழகத்துக்கு ரூ.3 ஆயிரத்து 586 கோடி ஒதுக்கப்பட வேண்டும். இதில் மத்திய அரசின் பங்களிப்பு ரூ.2 ஆயிரத்து 151 கோடி. கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய நிதி ரூ.200 கோடி. எனவே இந்த ரூ.200 கோடியை ஒதுக்கி கொடுப்பதில் மத்திய அரசுக்கு எந்த சிக்கலும் இருக்காது.

அதேபோல கட்டாயக்கல்வி உரிமைச்சட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியை சமக்ர சிக்க்ஷா திட்டத்தில் இருந்து நீக்குவது குறித்தும் மத்திய அரசு பரிசீலித்து, கட்டாயக்கல்வி சட்டத்தின் கீழ் தமிழகத்துக்கு வழங்க வேண்டிய உரிய நிதியை சட்டரீதியாக ஒதுக்க வேண்டும். இந்த சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி உரிய காலக்கெடுவுக்குள் அந்த தொகையை தமிழக அரசு 25 சதவீத இடஒதுக்கீட்டுக்காக தனியார் பள்ளிகளுக்கு எந்தவொரு பாரபட்சமும் காட்டாமல் பிரித்து வழங்க வேண்டும்.

அதேபோல ஒன்றிய அரசிடமிருந்து நிதி கிடைக்கவில்லை எனக்கூறி காலம் தாழ்த்தாமல், சட்டரீதியாக தனியார் பள்ளிகளுக்கு வழங்க வேண்டிய நிதியை உரிய காலக்கெடுவுக்குள் தமிழக அரசு வழங்க வேண்டும்.

இவ்வாறு உத்தரவில் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.



த.லெனின்

# அமீனா புகுந்த வீடும் அமித்ஷா புதுப்பித்த கூட்டணியும்!

**நவீன சாணக்கியர் என்று சங்கப் பரிவாரங்களால் அழைக்கப்படும் உள்துறை அமைச்சர் தனது அமைச்சரவைக் கடமையைத் தவிர மற்றவற்றில், கட்சிகளைப் பிளப்பது, கூட்டணி சேர்ப்பது என்பதில் எப்போதும் முனைப்பு காட்டுகிறார்.**

தேர்தல் வெற்றிகளுக்கெல்லாம் அவர்தான் காரணம்என்பது போலவும், அவரது வியூகம்தான் வெற்றிக்கு வழி வகுக்கிறது என்றும் கருதுகிறார். தில்லுமுல்லுகள், திருகுதாளங்களே தேர்தல் வெற்றிக்குக் காரணம். பல தேர்தல்களில் தோல்விகளையும் அடைந்துள்ளார்.

சமீபத்தில் மதுரையில் நடைபெற்ற பா.ஜ.க நிர்வாகிகள் கூட்டத்தில் பேசிய உள்துறை மந்திரி அமித்ஷா, மதுரையின் சொக்கநாதர், கள்ளழகர், முருகனையும் வணங்கி உரையைத் தொடங்குகிறேன். தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டு தமிழ் மொழியில் பேச முடியாததற்கு வருந்துகிறேன். மதுரை மண் மாற்றத்திற்கான மண். வரும் ஜூன் 22ம் தேதி முருகன் மாநாட்டை இந்த மண்ணில் சிறப்பாக நடத்திக் காட்ட வேண்டும். என்னுடைய கண்ணும், காதும் தமிழ்நாட்டிலேயே இருக்கின்றன என்று பேசியுள்ளார்.

### தேர்தலுக்கு தெய்வமே துணை!

தேர்தல் வந்துவிட்டால்தான் கள்ளழகர், சொக்கநாதர், முருகன் எல்லாம் அவர் கண்களுக்குத் தெரிகிறார். மற்ற நேரங்களில் விநாயகர் ஊர்வலங்களும், கலவர யாத்திரைகளும்தான் அவர்களது அரசியல் நடவடிக்கைகள். அப்படி என்றால் இனிமேல் விநாயகர் ஊர்வலங்கள் தமிழ்நாட்டில் நடக்காதா தமிழ்க் கடவுளான முருகனின் வேல் யாத்திரை மட்டுமே நடத்துவோம் என்று வெளிப்படையாக அறிவிக்கத் தயாரா? இதே மதுரைக்கு வேறு ஒரு வரலாறும் உண்டு. இறையனாரே நெற்றிக்கண்ணைத் திறந்து குற்றமா என்று கேட்டபோது நெற்றிக்கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே !என்று வாதிட்ட புலவன் நக்கீரனாரின் நகரமும் கூட என்பதை மறக்க வேண்டாம். முருகனைப் பெருந்தெய்வ வழிபாட்டில் சேர்த்தவர்கள் மாடன், காடன், ஒண்டிவீரன், பேச்சி என்று சிறு தெய்வங்களுக்கெல்லாம் சிறப்பு செய்வார்களா?

### மாநிலத்துக்கு ஒரு கடவுள் முழக்கம்!

இப்படித்தான் நாடாளுமன்றத் தேர்தலின் போது மாநிலத்திற்கு ஒரு கடவுளை அவர்கள் தேர்தல் பிரச்சாரத்திற்கு அழைத்தார்கள். உ.பி தேர்தலின் போது அயோத்தி ராமரைத் துணைக்கு அழைத்தனர். ஆனால் அயோத்தி தொகுதியிலேயே பெரும் தோல்வியைக் கண்டனர். கர்நாடகத் தேர்தலின் போது ஜெய் பஜ்ரங்க பள்ளி என்ற முழக்கத்தையும், டெல்லி தேர்தலின் போது அனுமான் சாலிசா முழக்கங்களையும், ஒடிசா தேர்தலின் போது ஜெய் ஜெகநாதர் ! என்ற முழக்கத்தையும், மேற்குவங்கம் சென்ற போது அங்கே ஜெய் காளி !என்ற முழக்கத்தையும் முன்வைத்துப் பிரச்சாரங்களையும் மேற்கொண்டார்கள். ஆனால் ஒடிசா, டெல்லியைத் தவிர்த்து மற்றவைகளில் பெரும் தோல்வியைக் கண்டனர்.

### திடீர் தமிழ்க் காதல்!

தேர்தல் வந்துவிட்டாலே அவர்களுக்குத் தமிழ் மீது பற்று பீறிட்டு ஊற்றெடுக்கிறது. ஆனால் இந்திய மொழிகள் அனைத்திற்கும் தாய் சமஸ்கிருதம் என்று பொய்யாக அவ்வப்போது பேசிக்கொள்வார்கள். செம்மொழி நிதி ஒதுக்கீட்டில் தமிழுக்குக் கிள்ளிக் கொடுப்பதும், செத்த மொழியான சமஸ்கிருதத்திற்கு அள்ளி, அள்ளிக் கொடுப்பதும் அவர்கள் வாடிக்கை. ஏன் தேர்தல் பிரச்சாரத்தைக் கூட அவர்கள் தேவ மொழியான சமஸ்கிருதத்திலேயே மேற்கொள்ளலாமே? அப்படி



மேற்கொண்டால் நிலமை என்னாகும் என்பது அவர்கள் அறிந்ததுதான். அதனால்தான் இப்போது தமிழையும், தமிழ்க் கடவுளையும் முன்வைக்கிறார்கள். தமிழ்நாட்டு மக்கள் இவற்றைப் பார்த்து மயங்கி விடமாட்டார்கள். ஆனால் தங்கள் கோபத்தை எல்லாம் திரட்டி, ஓட, ஓட விரட்டுவார்கள். அதுதான் இந்தித் திணிப்பின் போதும், மாநில உரிமைகள் பறிக்கப்பட்ட போதும் நிகழ்ந்தது. பொருந்தாக் கூட்டணிக்கு இந்தத் தேர்தலிலும் வருந்தத்தக்க முடிவை மக்கள் அளிப்பார்கள்.

ஏன் ஒடிசா தேர்தலின் போது பூரி ஜெகந்நாதரின் பண்டார சாவியினைத் தமிழர்கள் திருடி விட்டார்கள் என்று பழிசுமத்திப் பரப்புரை மேற்கொண்டவர்தான் பொய்யில் பூத்த பிதாமகன் பிரதமர் மோடி ! இப்போது எந்த முகத்தைவைத்துக்கொண்டு தமிழ்நாட்டிற்கு வருகிறார் நாடி !

முருகன் மாநாட்டைத் தமிழ்நாட்டில் சிறப்பாக நடத்த வேண்டுமாம் ! சரி அந்த முருகன் பேசிய தமிழ் மொழிக்கு என்ன சிறப்பு செய்யப் போகிறீர்கள்? தமிழ்நாட்டுத் திருக்கோயிலில் இருக்கும் ஆகாத ஆகம விதிகளைத் திருத்தி வழிபாட்டு மொழியாகத் தமிழைப் புகுத்தத் தயாரா? அந்தக் கூட்டணியில் இருக்கும் அதிமுக உள்ளிட்ட கட்சிகள் இந்தக் கோரிக்கைகளை முன்வைப்பார்களா? மாட்டார்கள் ! ஏனெனில் தமிழ் அவர்கள் எண்ணத்தில் நீச மொழி. சமஸ்கிருதம்தான் அவர்கள் நெஞ்சுக்கு நேரான பாச மொழி !

### கூட்டணி ஆட்சியாம்!

வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி மிகப்பெரிய வெற்றியைப் பெற்று, பா.ஜ.க. – அ.தி.மு.க. கூட்டணி ஆட்சியை அமைக்குமாம். அமித்ஷாவால் தி.மு.க.வைத் தோற்கடிக்க முடியாது என முதல்வர் ஸ்டாலின் உறுதியாகச் சொல்கிறார். அமித்ஷாவால் முடியாமல் இருக்கலாம். தி.மு.க.வை வீட்டுக்கு அனுப்பும் மாற்றத்தை மதுரை உண்டாக்கும். தி.மு.க.வைத் தூக்கி எறிய மக்கள் காத்திருக்கிறார்கள் என்று மக்கள் ஏதோ தங்கள் சட்டைப் பையில் இருப்பதைப் போலவும் தாங்கள் இடுகிற கட்டளைக்கு அப்படியே அவர்கள் கட்டுப்பட்டு வாக்களிப்பார்கள் என்கிற ஆண்டைத் தனம்தான் இதில் குடியேறி இருக்கிறது. உண்மையில் தமிழ்நாட்டின் கல்வி நிதியை மறுத்து வேறு மாநிலங்களுக்குக் கொடுத்த நிகழ்வாக இருந்தபோதிலும், தமிழக ரயில்வே திட்டங்களுக்கு அளிக்கப்பட்ட சொற்ப நிதியைக் கூடத் திரும்பப் பெற்றதாக

### அடங்க மறுக்கும் ஆர்ப்பரித்து எழும்

மதுரை மக்கள் பாஜகவின் நோக்கங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ் மீதான தனது அன்பைப் பொழிந்து பேசிய அமித் ஷா, கீழடி (அகழ்வாராய்ச்சி) அறிக்கையை மத்திய அரசு ஏன் ஏற்கவில்லை என்பதற்கான பதிலை ஏன் அளிக்கவில்லை? கீழடியில் பாஜகவின் உள்ளடிகளை ஒருபோதும் தமிழ்நாட்டில் மறைக்க இயலாது. அத்துடன் திருப்பரங்குன்றம் ஆயிரம் வருட மலை என்கிறார். ஆனால், சங்க இலக்கியத்தில் அது பரங்குன்றம் என 3000 ஆண்டுகளாக இருப்பது ஆகும். அதுபோலவே தமிழும் ஆயிரம் ஆண்டு பழமையான மொழி என்றே பேசி வருகின்றனர். உண்மையில் அது 3000 ஆண்டுக்கு முந்தைய மூத்த மொழி இப்படி தமிழ் என்றாலே ஆயிரம் வருடத்திற்குள் அடக்கப் பார்க்கும் இவர்கள்தான் தமிழின் மீது புதிய காதல் கொண்டனர். நீங்கள் அடக்கப் பார்த்தால் அடங்க மறுக்கும் ஆர்ப்பரித்து எழும். எனவே ஒட்டுமொத்தமாக அவர்களின் மனநிலை தமிழர்களுக்கும், சமத்துவச் சிந்தனைக்கும் எதிரானது.

இருந்தாலும், நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கைக்குக் கேளாக் காதினராக அவர்கள் இருந்தாலும், பேரிடர் கால நிவாரணத் தொகை அளிப்பதில் பாராபட்சம் காட்டும் போக்காக இருந்தாலும், வரி மேல் வரி விதிக்கும் ஒரு வரி பயங்கரவாத அரசனாக ஒன்றிய அரசு விளங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் அன்னபூர்ணா 'ஜாம் பன்' அதை வெளிச்சப்படுத்திக் காட்டியது இப்படி எதை எடுத்தாலும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கிற, தமிழ் மொழியின் பண்பாட்டுக் கருவூலத்திற்கு எதிராகச் செயல்படும் இவர்களை தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். எத்தனை வேடம் போட்டாலும் அவர்களது கொண்டையை மறைக்க முடியவில்லை ! எனவேதான் பாஜகவின் இடுப்பொடித்து அதன் இறுதி அத்தியாயத்தை எழுத தமிழகம் தயாராகி விட்டது.

### தேர்தல் ஆணையத்தோடு வெற்றிக் கூட்டணி!

கடந்த 2024ல் பிரதமராக மீண்டும் மோடி பொறுப்பேற்றார். ஒடிசா, அரியானாவிலும் வென்றோம். மராட்டியத்திலும் இதுவரை இல்லாத அளவுக்கு பா.ஜ.க வெற்றியைப் பதிவு செய்திருக்கிறது. டெல்லியில் 27 ஆண்டுகளுக்குப் பிறகு பா.ஜ.க ஆட்சி அமைத்துள்ளது என்று தனது தேர்தல் ஆணையத்தின் கூட்டணியோடு வென்ற, வெற்றிச் செய்திகளைப் பகிர்ந்துள்ளார். மகாராஷ்டிரத்தில் மாலை ஐந்து மணிக்கு மேல் 76 லட்சம் வாக்குகள் பதிவாகியிருக்கின்றன. 7 மணிக்கு ஒரு கணக்கு, பத்தரை மணிக்கு ஒரு கணக்கு, காலை விடிந்தவுடன் வேறொரு கணக்கு என்று இது அதிகரிக்கப்பட்டு இந்த முறைகேட்டின் மூலம் தான் வெற்றி பெற்றுள்ளார்கள். நடுநிலையானது தேர்தல் ஆணையம் என்றால் கேட்கப்படும் சிசிடிவி காணொளிக் காட்சிகளை எதிர்க்கட்சிகளுக்கு அளிக்க வேண்டியது தானே ஏன் மறுக்கிறீர்கள்? ஏனென்றால் அவை எல்லாம் முறைகேடுகளால் வந்த வெற்றி என்பதை நாட்டு மக்கள் உணர்ந்து விடுவார்கள் என்பதால்தான் !

### பெண்களுக்கு எதிரான குற்றங்கள்

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தமிழ்நாட்டில் மலிந்து காணப்படுகின்றன என்று முதலைக்கண்ணீர் வடித்துள்ளார்.

தேசியக் குற்ற ஆவணக் கணக்கின்படி இந்தியாவில் பெண்களுக்கு எதிரான தாக்குதல்கள், அத்துமீறல்கள், பாலியல் சீண்டல்களில் இந்தியாவிலேயே உச்சம் தொட்ட முதல் 10 மாநிலங்களில் முதலில் இருப்பது ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, குஜராத் ஆகிய ஐந்து பாஜக ஆளும் மாநிலங்கள்தான் முன் வரிசையில் அணிவகுத்து அசிங்கப்படுத்துகின்றன. நிலைமை இப்படி இருக்க தமிழ்நாட்டில் இப்படிப் பேசுவது அவர்களின் வெட்கமற்ற, நாணயமற்ற, செயலைத்தான் வெளிப்படுத்துகிறது.

### ஊழல் குறித்த உபதேசம்!

ஊழலில் திளைக்கும் திமுக அரசு தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டது என்றும் பேசி உள்ளார். ஊழலின் மொத்த வடிவமே பாஜகதான் ! பல கோடி செலவழித்துப் போடப்பட்ட பாலங்கள் விரிசல் காண்கின்றன, இடிந்து விழுகின்றன, ராமர் ஆலயம் சிறு மழைக்கே கசிந்து ஒழுகிறது, துவாரகா டெல்லி அதிவிரைவு சாலைக்கு 1 கி.மீ தூரத்திற்கு 250 கோடி ரூபாய் செலவழித்து இருக்கிறார்கள். அமித்ஷாவின் மகன் கிரிக்கெட் வாரியத்தின் தலைவர். 10 ஆண்டுகளில் 36 ஆயிரம் மடங்கு சொத்து சேர்த்துள்ளார். இவையெல்லாம் உழைத்துச் சேர்த்தது போலும் ! முதல் நாள் ரெய்டு அடுத்த நாள் அந்த நிறுவனங்களிடம் ஈ.டியைக் காட்டி தேர்தல் பத்திரப் பணம் பிடுங்குவது எனப் பண வேட்டை ஆடும் பாஜக ஊழலைப் பற்றி உபதேசம் செய்கிறது. அதுவும் உச்ச நீதிமன்றமே ஊழல் வழக்கில் குற்றவாளிகள் என்று தீர்ப்பு அளித்த பிறகு, ஊழலில் திளைக்கும் அதிமுகவோடு கூட்டணி சேர்ந்த பிறகு ஊழலைப் பற்றிப் பேசுகிறார்கள் !

ஓ... பாஜக வோடு சேர்ந்து விட்டால் ஊழல்வாதிகள் புனிதர் ஆகிவிடுவார்கள் அல்லவா ! இந்தக் கொள்கையற்ற தமிழ்நாட்டின் நலனுக்கு எதிரான ஊழல் பெருச்சாளி கூட்டணியை விரட்டிட உறுதி ஏற்போம் !

தொடர்புக்கு: 9444481703

# சின்ன வள்ளம்/ பெரிய வள்ளம் போராட்டம்-1946

## நியாயமான வள்ளத்தில் அளந்து போட வேண்டும் ஏழை மக்கள் வாழவேண்டும்

விவசாயிகளே – பொதுமக்களே நாம் மிகவும் கஷ்ட நிலையை அடைந்திருக்கிறோம். உண்ண உணவுக்கு பஞ்சம் என்று ஆனது. உடுக்க உடைக்குப் பஞ்சம், இருக்கும் இடத்திற்குப் பஞ்சம், உலகத்தில் பஞ்சம் என்றால் நமக்கு வந்ததைப் போல பஞ்சம் யாருக்கும் வந்திருக்காது. ஏன் இப்படி நமக்குப் பஞ்சம் வர வேண்டும். கொஞ்சம் நன்றாய் யோசிக்க வேண்டும். வேலை செய்யாமல் சும்மா இருந்தோமா ஏன் நமக்குப் பஞ்சம் வர வேண்டும், இரவு பகலாக மழை, வெய்யில், பாம்பு, பல்லி என்பதைக் கூடப் பாராமல் நெற்றி நீர் நிலத்தில் விழ ஓர் குண்டுமணி ரத்தம் சிந்தி பாடுபட்ட நமக்கு ஏன் பஞ்சம் வர வேண்டும்? நிலச் சொந்தக்காரர்களான பணக்காரர்கள் 10 குழியை ஒரு ஏக்கர் என்றும் ஒரு குழிக்கு ஒரு கலம் வாங்க வேண்டியிருக்க ஒன்றை கலம் வாங்கியும் நான்குபடி கொண்டது ஒரு வள்ளமாக இருக்க 4 ¼, 4½, 4¾ படி கொண்ட பெரிய வள்ளத்தினால் நமது நெல் அரிசியை அளந்து பத்துக் கலத்தை ஏழு கலமாகச் செய்து பட்டப் பகலிலேயே நமது வயிறு பதை பதைக்க கொண்டு போய்க் கொட்டி வைத்துக் கொண்டு பரவசமாக இருக்கிறார்கள். நாம் பட்டினி கிடந்து சாகிறோம். இனி இம்மாதிரி ஏமாற்றத்துடன் இருக்க முடியாது. அரசு போட்டிருக்கும் முத்திரைப் படி கொண்டு அளந்து கொண்டு போக வேண்டும் எனக் கட்டாயப்படுத்திச் சொல்ல வேண்டும்.

அனைவரும் ஒற்றுமையாய் இருங்கள். மீறி நெல்லை அளக்கவோ இந்தப் படியில் அளக்க முடியாது என்று சொன்னாலோ உடனே விவசாயச் சங்க காரியதரிசியிடம் தெரியப்படுத்துங்கள். அப்பொழுதுதான் நமக்குப் பஞ்சம் ஏற்படாது. நாம் நன்றாக வாழலாம்.

**விவசாயச் சங்க காரியதரிசி**
**முத்துசாமி**
**ஆணையாம்பட்டி**

இப்படி ஒரு துண்டுப் பிரசுரம் போட்டு சின்ன வள்ளம் பெரிய வெள்ளம் போராட்டத்தைத் தொடங்கினார்கள்.

ஆணையாம்பட்டி கூலி விவசாயத் தொழிலாளர்கள். இந்தத் துண்டுப் பிரசுரத்தை தோழர் எஸ்.ராமு கோனார் சாகும் தறுவாயில் கட்சி விவசாயிகள் சங்கம் செய்த பணிகள் பிரசுரம் ஆகியவற்றைப் பத்திரப்படுத்திப் பாதுகாத்து வந்ததை ஆ.தங்கவேல் ஆசிரியர் ஆணையாம்பட்டியிடம் கொடுத்துள்ளார். இருவரும் சேர்ந்து 80 ஆண்டுகளாகப் பாதுகாத்து வைத்திருந்து கொடுத்தவர் ஆ.தங்கவேல் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆணையாம்பட்டி.

சேலம் மாவட்டம் கெங்கவள்ளி வட்டம் ஆணையாம்பட்டி பகுதி பச்சமலை அடிவாரம் கொல்லி மலையிலிருந்து வரும் ஆறு உள்ள வளமான பூமியை உடையது. இந்தப் பகுதி விவசாய நிலம் முழுதும் நிலத்தில் இறங்கி உழக் கூடாதென்று ஐதீகத்தைக் கடைபிடிக்கும் பார்ப்பனர்கள் கையில் இருந்துள்ளது. இந்த நிலத்தில் கூலி விவசாயம் செய்து வந்த விவசாயத் தொழிலாளர்கள் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள். இவர்கள் பார்ப்பன நிலச் சுவான்தாரர்களிடம் சாமி சாமி என்று அழைத்து அவர்கள் கொடுக்கும் வேலையைச் செய்து அவர்கள் தூக்கிப் போடும் கூலியைப் பெண்கள் மடியை விரித்துத் தூரமாக நின்றும் ஆண்கள் தனது துண்டில் கொங்காடை கட்டித் தூரமாக நின்றும் தானியத்தைப் பெற்றுக்கொண்டு பார்ப்பனர்களின் கொத்தடிமைகளாக வாழ்ந்தவர்கள்.

அப்படிப்பட்ட மக்கள் தினமும் கால் பட்டினி, அரைப் பட்டினி, முழுப் பட்டினி என்று பசி நோயால் மடிந்துகொண்டிருக்கும் அவல நிலைகளை அந்தப் பகுதி விவசாயத் தொழிலாளர் சங்கச் செயலாளர் முத்துசாமி ஆத்தூர் வட்டம் விவசாயிகள் சங்கச் செயலாளர் எஸ்.ராமுகோனார் மூலம் சேலம் மாவட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தகவல் கொடுத்து அவர் மூலம் ஜாகீர் அம்மாபாளையத்தில் வசிக்கும் மாவட்ட விவசாயிகள் சங்கச் செயலாளர் கே.பாலன் அவர்களுக்குத் தகவல் கொடுத்து மேற்கண்ட விவரங்களை மக்களிடம் விளக்கிப் பேச பொதுக்கூட்டம் போடக் கூறினார்கள்.

அதன்படி பொதுக் கூட்டம் போடப்பட்டது. அந்தப் பொதுக்கூட்டத்தில் சிறப்புப் பேச்சாளர்களாக டி.ராமச்சந்திரன் பெத்தநாயக்கன் பாளையம் ஊராட்சிக்குழுத் தலைவர் அவர்களும் சுதந்தரப் போராட்ட வீரர் பாஷாகான் சேலம் மாவட்ட விவசாயிகள் சங்க கூட்டுச் செயலாளர் அவர்களும் கே.பாலன் ஜாகீர் அம்மாபாளையம் சங்கச் செயலாளரும், வாழப்பாடி சந்திரன், எஸ்.ராமுகோனார் தலைமையில் நடைபெற்றது. ஆணையாம்பட்டி பகுதி விவசாயிகள் சங்கச் செயலாளர் முத்துசாமி வரவேற்புரை வழங்கினார்.

போராட்டம் கடுமையானது. ஆண்களும் பெண்களும் வீதியில் இறங்கி பல போராட்டங்கள் செய்து பெரிய வள்ளத்தில் கூலி உயர்வு வாங்கினார்கள். ஆணையாம்பட்டியிலிருந்து போராட்டத்தை உருவாக்கக் கடுமையாக உழைத்த நெம்பர் பெருமாள் சேலம் மாவட்ட வி.தொ.ச மாவட்டச் செயலாளராக இருந்து கொரோனாவால் இறந்துபோன ஏ.சீனிவான் மாமனார் சீனிவாச கண்டீர் நெம்பர் எம்.ஏ.ஆறுமுகம், சேலம் மாவட்டத்தில் 80 ஆண்டுகளுக்கு முன்னமே சாதாரண ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களையும், பிற்படுத்தப்பட்ட மக்களையும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களையும் ஒன்று திரட்டிப் போராட வைத்தவர்கள் அன்றைய கம்யூனிஸ்ட்கள். அப்படிப்பட்ட வீரஞ் செறிந்த முன்னோடி மாவட்டம்தான் சேலம். இந்த மாவட்டத்தில்தான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நூற்றாண்டு நடைபெறும்



ப.பரமசிவம்

காலகட்டத்தில் தமிழ் மாநில இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு இந்தியா சுதந்திரமடைந்த நாளான ஆக 15ல் தொடங்கி வெள்ளையனைச் சும்மா கெஞ்சி சுதந்திரம் கேட்டால் கொடுக்க மாட்டான் அடித்து விரட்ட வேண்டுமென்று தனி ராணுவப் படையை உருவாக்கி அதற்குத் தளபதியாக நின்று வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு சிம்ம சொப்பனமாகச் செயல்பட்ட சுபாஷ்சந்திரபோஸ் நினைவு நாளில் 10 ஆயிரம் செந்தொண்டர் படை பறை முழக்கத்துடன் அணிவகுத்துச் செல்ல, அதன் பின் கட்சித் தொண்டர் பேரணி பல லட்சம் பேர்கள் செல்ல இருக்கிறார்கள். அதனால் தமிழகம் முழுவதுமுள்ள தொழிலாளர் வர்க்கப் படையும், இளைஞர்கள், மாணவர்கள், மாதர்கள் அணி திரண்டு அணி அணியாக வாரீர் என அழைக்கிறோம்.

**செல்: 9442995040**

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சேலத்தில் நடைபெறவுள்ள தமிழ்நாடு மாநில 26வது மாநாட்டிற்கு இரண்டாவது தவணையாக 23 கட்சி கிளைகள் மூலம் உண்டியல் வசூல்

| வ. எண். | கிளையின் பெயர் | கிளைகள் | நிதி விபரம் |
|---|---|---|---|
| 1. | பனமரத்துபட்டிவீரபாண்டி ஒன்றியம் | 8 | 45,950 |
| 2. | நங்கவள்ளி ஒன்றியம் | 7 | 63,930 |
| 3. | கொண்டலாம்பட்டி மண்டலம் | 2 | 11,000 |
| 4. | சேலம் ஒன்றியம் | 2 | 6,800 |
| 5. | ஆத்தூர் வட்டம் | 1 | 3,000 |
| 6. | வாழப்பாடி ஒன்றியம் | 1 | 2,500 |
| 7. | சூரமங்கலம் மண்டலம் | 2 | 25,000 |
| | | 23 | 1,58,180 |

## பட்டினியில் மடியும்...

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஐ.நா கண்டித்துள்ளது. ஆனால், பசியையும் பட்டினியையும் ஆயுதமாக்கி, பாலஸ்தீனர்களைக் கொன்று அழிப்பதற்கான 'புதிய போரை' இஸ்ரேல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. பாலஸ்தீனர்களின் சாம்பல் மேட்டில், ரியல்எஸ்டேட் தொழில் நடத்த அமெரிக்கக் கழுகு காத்துக் கொண்டிருக்கிறது.

இஸ்ரேல், அமெரிக்க நாடுகளின் ஆதரவு பெற்ற 'காசா மனிதாபிமான அறக்கட்டளை' (GHF) என்ற அமைப்பு மட்டும் உணவுப் பொருட்கள் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. பெரிய கட்டமைப்போ அனுபவமோ இல்லாத இந்த அமைப்பு, உணவு வாங்கக் குவியும் மக்கள் கூட்டத்தைச் சமாளிக்க முடியாமல் திணறுகிறது. திரண்டிருந்தவர்களில் ராணுவம் குறிவைத்து நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 97 பாலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்.

ஜி.எச்.எஃப் அமைப்புடன் இணைந்து பணியாற்ற ஐ.நா மற்றும் உதவி நிறுவனங்கள் மறுத்து விட்டன. அதன் செயல்பாடுகள் நடுநிலைமை இல்லாமலும், மனிதநேய உதவிகளை ராணுவ மயமாக்கும் இஸ்ரேல் திட்டத்தின் ஒரு பகுதியாகவும் இருப்பதாக ஐ.நா குற்றம்சாட்டியுள்ளது.

அதே நேரத்தில், பட்டினியால் தவித்துக் கொண்டிருக்கும் பாலஸ்தீன மக்களுக்கு உணவு உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை நேரடியாக வழங்கப் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மனிதாபிமான அமைப்புகள்



முன்வந்தன.

அவர்களின் ஏற்பாட்டில், உணவு மருந்து உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை ஏற்றிக் கொண்டு, மட்லின் என்ற கப்பல் ஜூன் 1 அன்று இத்தாலியில் இருந்து புறப்பட்டது. இதில், காலநிலை மாற்றச் செயல்பாட்டாளரான கிரெட்டா துன் பெர்க், ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ரிமா ஹசன் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 12 தன்னார்வலர்கள் பயணித்தனர்.

அந்தக் கப்பலை சர்வதேசக் கடல் எல்லையில் வழிமறித்த இஸ்ரேல் ராணுவம், துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றது. கப்பலில் கொண்டு வரப்பட்ட நிவாரணப் பொருட்கள் காசாவிற்குச் செல்லவிடாமல் தடுத்து நிறுத்தியது.

ஐ.நா.வின் நிவாரணப் பொருட்களையும் காசா மக்களுக்குக் கொடுக்க விடாமல் இஸ்ரேல் ராணுவம் தடுத்து வருகிறது.

கடந்த மே முதல் வாரம், ஹாண்டலா கப்பலில் தன்னார்வலர்கள் நிவாரணப் பொருட்களை காசாவிற்கு எடுத்துச் சென்றனர். அந்தக் கப்பல் சர்வதேசக் கடல் எல்லையை நெருங்கும் போதே, இஸ்ரேல் ராணுவம் டிரோன் மூலம் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியது.

ஜூன் முதல் வாரத்தில், போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்து ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் மீண்டும் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ஆனால் அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தித் தீர்மானத்தை நிராகரித்தது. இப்படி ஐந்தாவது முறையாக அமெரிக்கா நிராகரித்துள்ளது.

போர் நிறுத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்த பாதுகாப்பு கவுன்சிலின் மற்ற 14 உறுப்பு நாடுகளும், காசா பேரழிவை எதிர்கொண்டிருப்பதாகவும், உணவு வழங்குவதற்கான கட்டுப்பாடுகளை உடனடியாக நீக்க வேண்டும் என்றும் வலியுறுத்தின.

இந்தக் கூட்டத்தில் பேசிய ஐ.நா.வுக்கான பாலஸ்தீன பிரதிநிதி ரியாத் மொன்சூர், "10 லட்சம் குழந்தைகள் உட்பட 20 லட்சம் அப்பாவி பாலஸ்தீன மக்களைப் பஞ்சத்தின் விளிம்புக்கு இஸ்ரேல் கொண்டு வந்துள்ளது" எனக் குற்றம் சாட்டினார்.

"காசாவில் வாழும் மொத்த மக்களும் பஞ்சத்தில் சிக்கியுள்ளனர். பூமியில் பசிக் கொடுமை மிகுந்த இடமாக காசா மாறியுள்ளது" என்று ஐ.நா மனிதாபிமான அலுவலகத்தின் செய்தித் தொடர்பாளர் ஜென்ஸ் லார்கே வேதனையுடன் கூறியுள்ளார்.

வல்லரசுகளையும் அவற்றின் அரவணைப்பில் இருக்கும் இஸ்ரேல் போன்ற இனவெறி அரசுகளையும் மக்கள் எழுச்சிதான் பணிய வைத்துள்ளது. பாலஸ்தீனர்களைப் பாதுகாக்க அப்படிப்பட்ட மக்கள் எழுச்சி கட்டமைக்கப்பட வேண்டும்.

**- வ.மணிமாறன்**

# நேசத்தைப் பரப்பும் குழு இன்றைய தேவை!

## பிரசாந்த் பூஷன் அழைப்பு!

**அமெரிக்க நாட்டின் நியூஜெர்சியில் கடந்த ஜூன் 5ல் நடத்தப்பட்ட கருத்தரங்கில் "இந்தியாவில் ஜனநாயகத்தின் நிலை" என்ற தலைப்பில் மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷண், நீதித்துறை உள்ளிட்ட ஜனநாயக நிறுவனங்கள் பலத்த அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருவதை, பகிரங்கமாகத் தோலுரித்துள்ளார்.**

நீதிபதிகளின் தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்து, அவற்றைப் பயன்படுத்தி அழுத்தம் கொடுக்கும் ரகசியத் திட்டத்தை ஒன்றிய அரசு வகுத்திருப்பதை வெளிப்படுத்தினார்.

"இந்த அரசு நீதித்துறையின் சுதந்திரத்தைச் சிதைக்கும் மிகவும் அபாயகரமான வழியைக் கடைப்பிடிக்கிறது. பணியிலுள்ள எல்லா முக்கியமான நீதிபதிகள் மீதும் மட்டுமல்ல; எதிர்காலத்தில் தலைமை நீதிபதிகளாக வரக்கூடிய வாய்ப்புள்ளவர்களையும் குறிவைத்து, தனிப்பட்ட தகவல்கள் திரட்டப்படுகின்றன. காவல்துறை, அமலாக்கத் துறை, மத்தியப் புலனாய்வுத் துறை (CBI), வருமான வரித் துறை, தேசிய விசாரணை அமைப்பு (NIA) அனைத்தும் இதில் ஈடுபடுத்தப்படுகின்றன.

அதில் சம்பந்தப்பட்ட நீதிபதியோ அல்லது அவரது நெருங்கிய உறவினர்களோ ஏதாவது தவறு செய்திருப்பதாகக் கண்டுபிடித்தால், அதை வைத்து அந்த நீதிபதிகளை பிளாக்மெயில் செய்கின்றனர்."

"நீங்கள் எங்கள் கட்டளைக்கு இசைவாக நடக்காவிட்டால், உங்கள் பிள்ளைகளைச் சிறையில் அடைக்க வேண்டி வரும் என்று நேரடியாக மிரட்டுகிறார்கள்."

40 ஆண்டுகளுக்கு மேலாக, வழக்கறிஞராகப் பணியாற்றும் பிரசாந்த் பூஷன், இவையெல்லாம் வெறும் வதந்திகள் அல்ல, உண்மையிலேயே நடந்து கொண்டிருக்கிறது" என்று உறுதிப்படுத்தினார்."

"கெடுவாய்ப்பாக, உச்சநீதிமன்ற நீதிபதிகளுக்கும் கூட இந்த அரசின் நடவடிக்கைகள் குறித்து அவமதிப்பு வழக்கு தொடர்வதற்குத் தைரியமில்லை."

இதனால், எந்தப் பக்கமும் சாராமல் நேர்மையாகத் தீர்ப்பளிப்பார்கள் என்று கருதப்படும் சுயேச்சையான நீதிபதிகள் இனி நியமனம் பெறவே முடியாது என்ற நிலையை, அரசின் தலையீடு ஏற்படுத்திவிட்டது."


"குறிப்பாக, சிறுபான்மைச் சமூகத்தைச் சார்ந்த நீதிபதிகள், அவர்களது பெயர்கள் மீண்டும் மீண்டும் பரிந்துரை செய்யப்பட்ட போதிலும், அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்."

"நீதிபதிகளுக்குள் ஒரு பயம் உள்ளது. மோடியின் வலுவான நாசிச ஆட்சி, நேர்மையான நீதிபதிகளையும் பயத்தில் ஆழ்த்தியுள்ளது."

"இந்த பயம்" காரணமாகவே, மக்களின் அரசியல் அடிப்படையிலான உரிமைகள் பறிக்கப்படுகின்ற நேரத்திலும் கூட, நீதிபதிகள் அரசை எதிர்க்கத் தயங்குகிறார்கள்.

பூஷன், நீதித்துறை மட்டுமல்ல மற்ற முக்கிய ஜனநாயக அமைப்புகளும் அழிக்கப்படுகின்றன என்றும் எச்சரித்தார்.

"கடந்த 10 ஆண்டுகளில், தேர்தல் ஆணையம் தனது சுயேச்சைத் தன்மையை இழந்துவிட்டது. அரசின் கட்டளையை மட்டும் பின்பற்றும் அமைப்பாகவே இது பார்க்கப்படுகிறது."



### உச்சநீதிமன்றத்தால் கூட..

மோடி அரசு மிரட்டல்கள் விடுத்தும், பல்வேறு தகிடுதத்தங்கள் மூலமாகவும், மோடி அரசு, நீதித்துறையின் சுயேச்சைத் தன்மையைக் குறைக்க முயலுகிறது என்கிறார் பிரசாந்த் பூஷண். இந்த மீறல்களை உச்சநீதிமன்றத்தால் கூட எதிர்த்து நிற்க முடியவில்லை என விளக்கம்.

"தலைமை கணக்கு தணிக்கையாளர் (CAG) கூட, ஆளும் கட்சி அரசு தலைமையிலான மாநிலங்களின் கணக்குகளை ஆய்வு செய்யவில்லை. முன்பைக் காட்டிலும் 75% குறைவாகவே ஆய்வுகள் நடைபெறுகின்றன."

அதேபோல், ED, CBI, வருமானவரி துறை, NIA மற்றும் மாநிலக் காவல்துறை போன்ற விசாரணை அமைப்புகள் அரசின் கைக்கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

"பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் 90%க்கும் மேற்பட்டவை எதிர்க்கட்சித் தலைவர்களின் மீதுதான் தொடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் பாஜகவில் சேர்ந்துவிட்டால், வழக்குகள் உடனே கைவிடப்படுகின்றன."

"பிரதான ஊடகங்களில் பெரும்பாலானவை 'கை தொட்ட ஊடகம்' (lapdog media) ஆகிவிட்டன. தமது சுயேச்சைத் தன்மையை இழந்து விட்டன."

"முக்கியமாகத் தேர்தல் பத்திரங்கள் வழியாகப் பெருநிறுவனங்களிடமிருந்து நன்கொடை பெறச் சட்டமியற்றப்பட்டது. மொத்தமாக 16,000 கோடி ரூபாய் மதிப்பிலான தேர்தல் பாண்டுகளில், பாஜக மட்டும் 8,000 கோடிக்கு மேல் பெற்றது என்பது தெரிய வந்துள்ளது."

"தேர்தல் பத்திரங்கள் மூலம் பிஜேபிக்கு நன்கொடை கொடுத்த நிறுவனங்களுக்கு, அரசு பல காண்ட்ராக்ட்களைக் கொடுத்தது அல்லது ஏதேனும் சலுகை வழங்கியது."

"இந்த ஜனநாயகமானது பணத்தின் விளையாட்டாகவே மாறிவிட்டது. பணத்தால் அதிகாரம், அதிகாரத்தால் மேலும் பணம். பணத்தின் ஆதிக்கம் இந்திய ஜனநாயகத்திற்கு மிக அபாயகரமானதாக மாறிவிட்டது."

இந்த அபாயச் சதி வலையை அறுத்தெறிய, இந்தியச் சமூகம் விழித்தெழ வேண்டும் என பிரசாந்த் பூஷன் அழைப்பு விடுத்தார்.

"ஒரு உண்மையின் படை பொய்களைப் பரப்பும் சைஃபர் படையல்ல, உண்மையைப் பரப்பும் பணிக்குழு; வெறுப்புக்குப் பதிலாக நேசத்தைப் பரப்பும் குழு இன்று இந்தியாவுக்குத் தேவை."

"பிஜேபியின் ஐ.டி.செல்லின் பொய்யான பரப்புரைகளுக்கு எதிராக, நாம் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வகையில் ஒற்றுமையாகச் செயல்பட்டாக வேண்டும்." என்றார் பிரசாத் பூஷன்.

**நன்றி: 'லா சக்ரா' இணைய இதழ்**
**தமிழில்: டி.எம்.மூர்த்தி**

# மணிப்பூரில் மீண்டும் வன்முறை: மெய்தே சமூகத்தினர் மீது துப்பாக்கிச்சூடு

தொடர் வன்முறையால் பாஜக ஆட்சி கவிழ்ந்து மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்தியுள்ளது மோடி அரசு. எனினும் வன்முறைச் சம்பவங்கள் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இந்நிலையில், ஞாயிறன்று மெய்தே இனத்தின் அமைப்பான அரம்பாய் தெங்கோலைச் சேர்ந்த தலைவர்களின் ஒருவரான கனன் சிங் இம்பால் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார். அவர் எதற்காகக் கைது செய்யப்பட்டார் என்பது தொடர்பாக தகவல் எதுவும் வெளியாகவில்லை. சில மணிநேரத்திற்குப் பிறகு, "நாங்கள்தான் கைது செய்தோம்" என சிபிஐ அதிகாரிகள் அறிவித்தனர்.

சிபிஐ அதிகாரிகள் அறிவிப்பைத் தொடர்ந்து மெய்தே சமூகத்தினர், "அரம்பாய் தெங்கோலைச் சேர்ந்த தலைவர் கனன் சிங்




வர்த்தகத்தைப் பயன்படுத்தியோ, வேறேதேனும் செய்தோ, வெளிநாட்டுக்காரனையாவது தலைமிட்டு இதைத் தடுத்து நிறுத்தச் சொல்லுங்களேன்!

உட்பட 5 பேரை நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டும். விடுவிக்கும் வரை போராட்டம் முடிவுக்கு வராது" என அறிவித்தனர். கனன் சிங் உட்பட 5 பேரை விடுவிப்பது தொடர்பாக குடியரசுத் தலைவர் ஆட்சியின் பொறுப்பாளரான அஜய் குமார் பல்லா எதுவும் கூறவில்லை. இதனால் மெய்தே சமூகத்தினர் இம்பால் பள்ளத்தாக்கு மாவட்டங்களில் போராட்டம் நடத்தி வருகின்றனர். இம்பால் பள்ளத்தாக்கின் பல மாவட்டங்களில் மெய்தே சமூகத்தினர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் கடும் மோதல் ஏற்பட்டது. இதில் பலர் காயமடைந்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

திங்களன்று இரவு இம்பால் கிழக்கு மாவட்டத்தின் குராய் லாம்லாம் பகுதியில் மெய்தே சமூகத்தினர்களுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் மோதல் வெடித்தன. மெய்தே சமூகத்தினர் 4 மற்றும் இரு சக்கரவாகனங்களை எரித்து வன்முறையில் ஈடுபட்டனர். வன்முறையை ஒடுக்கவும், கூட்டத்தைக் கலைக்கவும் பாதுகாப்புப் படையினர் பலமுறை கண்ணீர்ப் புகை குண்டுகள் மற்றும் ரப்பர் தோட்டாக்களால் சுட்டனர். சில இடங்களில் துப்பாக்கிச் சூடு சம்பவங்களும் நடைபெற்றதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அதேபோல தௌபல், காக்சிங் மாவட்டங்களிலும் சாலைத் தடுப்புகள் மற்றும் டயர்களை எரித்துப் போராட்டங்கள் நடைபெற்றன. திங்கள்கிழமை மாலை இம்பால் மேற்கு மாவட்டத்தின் தேரா பகுதியிலும் அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் பாதுகாப்புப் படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதில் அங்கு நீடித்த மோதல் ஏற்பட்டது. விஷ்ணுபூர் மாவட்டத்தின் நம்போலில், போராட்டக்காரர்களுடனான மோதலின்போது குறைந்தது 2 காவல்துறையினருக்குக் காயங் கள் ஏற்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளன.

முருகனை முன்னிறுத்தும்...
3 ஆம் பக்கத் தொடர்ச்சி

பரந்த அளவில் சிவ, வைணவக் கோயில்கள் எழுந்துள்ளன. முருகனை வழிபடும் கடவுளாகக் கொண்டிருந்த எளிய மக்களிடம் அத்தகைய பெரிய கோயில்களை அமைக்கும் வளம் இருக்கவில்லை.

மலேசியா போன்று உழைக்கும் தமிழர் குடியேறிய நாடுகளில், முருகன் கோயில்களே பெரிதும் எழுப்பப்பட்டன. உழைக்கும் மக்களது கடவுளாக முருகன் தொடர்ந்ததை இது உறுதிப்படுத்துகின்றது.

சித்தர்களின் தொடர்ச்சியாகவும் வள்ளலாரின் ஊடாகவும் தமிழ்நாட்டில், மூடநம்பிக்கை மறுப்பு, பார்ப்பன எதிர்ப்பு, சனாதன வெறுப்பு ஆகியவற்றைவலியுறுத்தப் பல இயக்கங்கள் தோன்றியுள்ளன.

கடவுள் மறுப்பாக இவை இல்லாமல் இருந்தாலும், நம்பிக்கைகளுக்கு அப்பால் மூடத்தனங்களையும் நிறுவன மேலாண்மையையும் எதிர்ப்பதில் முன்னின்றதைக் குறைத்து மதிப்பிடக் கூடாது. 'கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக வேண்டும்' என்ற உறுதி தொடர்ந்துகொண்டிருந்தது.

### பெரியாரது முன்னெடுப்புகள்

இவை யாவும், பெரியார் முன்னெடுத்த கடவுள் மறுப்பு, பார்ப்பன எதிர்ப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, தன்மதிப்பு ஏற்பு, மனித இருப்பு என்பன போன்ற சமூக நீதிப் பரப்புரைகளில் உள்ளடங்கி, சமய நிறுவனங்களைவிட மேம்பட்ட புரிதல்களுக்கு இட்டுச்சென்றுவிட்டன. கடவுள் நம்பிக்கைகளுக்கு அப்பால், சமூக நீதியையும் இணைவையும் இணக்கத்தையும் நிலைநாட்டிவிட்டன.

இதனால், சமூக இணக்கத்துக்கு மாறாக அரசியல் செய்வது இங்கு இயலாமல் போய்விட்டது.

அதனால்தான், தெருக்கள்தோறும் விநாயகர் சிலைகளை அமைத்து விழாக்களைக் கொண்டாடியபோது, மக்கள் பார்வையிட வந்தார்களேயன்றி, பா.ச.க.வினர் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. இதுதான் தமிழ்நாடு.

முருக வழிபாட்டாளர்கள் தங்களது பகுதிகளில் ஒன்றிணைந்து, பழனி போன்ற இடங்களுக்கு நடை பயணமாகச் சென்று வழிபடுவது நடைமுறையில் இன்றும் உள்ளது. இவை சமயம் என்ற வகைக்குள் அடைபடவில்லை. சைவமும் வைணவமும் கூடச் சமயங்களாகக் கருதப்பட்டாலும், அவை நிறுவனச் சமயங்களாகத் தமிழ்நாட்டில் உருவாகவில்லை.

### முருகனின் தொன்மையை மறுக்கும் பா.ச.க.

கீழடியின் காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டு என்பதைக்கூட ஏற்றுக்கொள்ளாத பா.ச.க.வினர், தமிழ்நாட்டில் இரும்பின் காலம் கி.மு. 3300க்கு முற்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

அக்காலத்தில் எழுந்த பண்டைய தமிழ்ப் பாடல்களில் காட்டப்படும் வேலனாகிய முருகன் என்ற தலைவனின் இருப்பு, ராமன் போன்ற கடவுளர்களுக்கும் முற்பட்டது என்ற உண்மையைத் தமிழ்நாட்டில் உள்ள பா.ச.க.வினர் ஏற்றுக்கொள்ள முன்வருவார்களா என்பது அய்யம்தான்.

தமிழ்க் கடவுளான முருகனின் தொன்மையை ஏற்றுக்கொள்ளாத பா.ச.க.வினர், இன்று முருகனைக் கொண்டாடுகிறார்கள், முருக பக்தர்களின் மாநாட்டினை நடத்துகிறார்கள் என்பது ஏற்கத்தக்கதாகத் தெரியவில்லை.

தமிழ்க் கடவுள் என்று எடுத்துக்கொண்டால், முருகனை இந்து சமயத்துக்குள் அடக்க முடியாது. முருக பக்தர்கள் என்றாலும் அவர்களில் பெரும்பாலானோர் இந்து சமயத்துக்குள் வராத எளிய மக்கள் பகுதியினர். இவர்கள் பா.ச.க.வினர் முன்னிறுத்தும் சனாதன அரசியலுக்கு அப்பாற்பட்டோராவர்.

**தொடர்புக்கு : 9444075561**

### வன உரிமைச் சட்டம்

## வளர்ச்சிப் பணிகளுக்கான வன நில வகை மாற்றம்

சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்திற்குட்பட்ட பகுதிகளில் பழங்குடி மக்கள் வாழும் கிராமங்களுக்கு அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்காக, 2006 வன உரிமைச் சட்டப்படி வனநில வகை மாற்றக் கோரிக்கைகளைப் புலிகள் காப்பக துணை இயக்குனர்கள் வன உரிமைச் சட்டத்திற்கு விரோதமாக மறுத்து வருகின்றனர்.

வன உரிமைச் சட்டம் 2006, பிரிவு 3(2), 13 வகையான வளர்ச்சிப் பணிகளைப் பழங்குடி கிராமங்களில் ஏற்படுத்த ஒவ்வொரு பணிக்கும் ஒரு ஹெக்கேடருக்கும் மிகாமல் வன நிலத்தைப் பயனர் முகமைக்கு வகைமாற்றம் செய்து பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்துள்ளது;

MOTA LETTER NO:23011/15/200,SG-II/18/05/2008 இந்த வன நில வகை மாற்றத்திற்கான வழிமுறைகளை வகுத்துக் கொடுத்துள்ளது. வன உரிமைச் சட்டம்2006, புலிகள் காப்பகங்கள்/தேசியப் பூங்காக்கள்/வனச் சரணாலயங்கள் அனைத்திற்கும் பொருந்தும் என்பதும் அறிந்ததே.

சத்தியமங்கலம் புலிகள்காப்பகம், ஆசனூர் வனக்கோட்டம், ஆசனூர் வனச் சரகத்தில் உள்ள புதுக்காடு பழங்குடியினர் கிராமத்திற்குப் பாதை வசதி மேற்கொள்ளவும், சத்தியமங்கலம் வனக்கோட்டம், தலமலை வனச்சரகம், மாவநத்தம் கிராமத்திற்கு காங்கிரீட் பாதை அமைக்கவும் சம்பந்தப்பட்ட பயனர் முகமைகள், சம்பந்தப்பட்ட கிராம சபைகளின் பரிந்துரையுடன் வன நில வகை மாற்றம் கோரியிருந்தன.

பார்வையில் காணும் கடிதங்களில், புலிகள் காப்பக கள இயக்குனர்கள் வன நில வகை மாற்றத்தை மறுத்து PARIVESH PORTAL ல் விண்ணப்பிக்கவும், வன உயிரின மற்றும் சுற்றுச் சூழல் அனுமதிகளைப் பெற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

2006 வன உரிமைச் சட்டப்படியான பணிகளுக்கு இவ்வகை அனுமதிகள் தேவையில்லை என்பதோடு, 1980 வனப் பாதுகாப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளும் இதற்குப் பொருந்தாது என்பதனையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறோம்.

புலிகள் காப்பகப் பகுதிகளுக்கு வன உரிமைச் சட்டம் பொருந்தும் போது, அச்சட்டத்திற்கு மாறாகப் புலிகள் காப்பகப் பகுதிகளில் உள்ள வனத்துறை அதிகாரிகள் செயல்படுவது, எஸ்சி/எஸ்டி வன்கொடுமைத் தடுப்புச் சட்டபடி குற்றமாகும் என்பதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறோம்.

ஆகவே, இந்த விஷயத்தில் தலையிட்டு வன உரிமைச் சட்டப்படி பழங்குடிப் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வன நில வகை மாற்றத்தினைச் செய்து தர உதவிட உங்களை வேண்டுகிறோம்.

**– பி.எல்.சுந்தரம்**

## சூரியின் கலை ஆர்வமும் மனிதாபிமானமும்



1997ல் ‘காதலுக்கு மரியாதை’ படத்தில் இருந்தே, ‘மற்றும் பலரக’ திரைப்படங்களில் வந்தவர்தான் சூரி. 2009ம் வரும் வெளியான வெண்ணிலா கபடி குழு படம்தான், “புரோட்டா சூரி” என்ற பெயரைப் பெற்றுத்தந்து, காமெடியனாக அடையாளம் காட்டியது. அதிலிருந்து கணக்குப் பார்த்தால், 14 வருடங்கள் நகைச்சவைக் கதாபாத்திரங்களில் நடித்தார்.

2023ல் வெளியான விடுதலை. அதைத் தொடர்ந்து வெளியான கொட்டுக்காளி, கருடன் ஆகியவற்றில் கதை நாயகனாக நடித்தார். அடுத்து அவர் நடிக்கும் மண்ணாடி படத்தின் துவக்க விழாவில், “சம்பாரித்த பணம் போதும்! இனி நல்ல படங்களைத் தேர்வு செய்து நடிக்கப் போகிறேன்” என்று பேசினார். அதை, நேற்று வெளியான “மாமன்” திரைப்படமும் உறுதிப்படுத்தி இருக்கிறது.

உறவுகளின் உன்னதத்தை மனிதர்களின் உணர்வுகளைச் சிறப்பாகப் பிரதிபலித்துள்ள திரைப்படம். கதையும் சூரிதான். இன்னொரு விசயத்தையும் சொல்ல வேண்டும். இந்தப் படம் வெற்றியடைய வேண்டும் என அவரது ரசிகர்கள் சிலர் மதுரையில் மண்சோறு சாப்பிட்டு இருக்கிறார்கள். அதைக் கடுமையாகக் கண்டித்திருக்கிறார் சூரி.

“படம் நல்லா இருந்தா ஓடப்போகுது. மண் சோறு சாப்பிட்டால், எப்படிப்பட்ட படமும் ஓடி விடுமா? உங்களை என் தம்பிகள் ரசிகர்கள் எனச் சொல்லவே தகுதி இல்லை” என்று காட்டமாகவே சொல்லியிருக்கிறார்.

சூரியைவிட அதிகமான வருடங்கள் திரைத்துறையில் இருந்து அதிகமான ரசிகர்களை வைத்திருக்கும் மாஸ் ஹீரோக்கள், கமர்சியல் என்கிற பெயரில் தரமில்லாத படங்களைக் கொடுத்து பல நூறு கோடி ரூபாய் சம்பாதிக்கிறார்கள். தன் ரசிகர்கள் மண்சோறு சாப்பிட்டால் என்ன? மண்ணையே உண்டால்தான் என்ன? படத்துக்கு விளம்பரம் கிடைத்தால் போதும் என நினைக்கிறார்கள். ஆனால் சூரி, அவர்களிடமிருந்து மாறுபட்டு நிஜ ஹீரோவாக இருக்கிறார். அவரது கலை ஆர்வமும் மனிதாபிமானமும் பாராட்டுக்குரியன.

**– பத்திரிகையாளர் டி.வி.சோமு**

# பாஜகவின் கைப்பாவை ஆகி

## ஜனநாயகத்து



வ.மணிமாறன்

தேர்தல் ஆணையம் தன்னாட்சி அமைப்பாக நீடிக்கிறதா? என்ற சந்தேகம் மீண்டும் தீவிரமாக எழுப்பப்படுகிறது. இம்முறை மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஆங்கில நாளிதழில் எழுதிய கட்டுரை சர்ச்சைத் தீயை பற்ற வைத்துள்ளது. அதில்,

“மகாராஷ்டிரா சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் சந்தேகத்திற்கு உரியதாகவே இருக்கின்றன. இதில் நடந்த மோசடிகளை மறைப்பதற்கு எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மீறி, தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்களில் இருந்தே மோசடி அப்பட்டமாகத் தெரிகிறது. அதனைப் பட்டியலிட்டுச் சொல்கிறேன்” என்று கட்டுரையை ராகுல் காந்தி தொடங்குகிறார். அவற்றை ஐந்து தலைப்புகளில் புள்ளிவிவரங்களுடன் எடுத்துரைக்கிறார்.

### “1. தேர்தல் ஆணையரை நியமிக்கும் குழுவை கையகப்படுத்தியது

தேர்தல் ஆணையர்கள் நியமனச் சட்டம் 2023ன் படி தேர்வுக்குழுவில் இருந்து உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி நீக்கப்பட்டார். பிரதமர், உள்துறை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் தேர்வுக் குழுவில் இருக்கின்றனர். இதில் 2:1 என்ற பெரும்பான்மை அடிப்படையில் பிரதமரும் உள்துறை அமைச்சரும் ஒருவரைத் தேர்வு செய்தால், எதிர்க்கட்சித் தலைவரால் என்ன செய்ய முடியும்? தேர்வுக் குழுவில் இருந்து உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியை நீக்கிவிட்டு, கேபினட் அமைச்சரை நியமித்தது ஏன்? முக்கியமான ஜனநாயக அமைப்புக்கு தேர்வு செய்யும் குழுவில் இருந்து நீக்கும் முடிவை எதற்காக எடுத்தீர்கள்?

### 2. போலி வாக்காளர்களைச் சேர்த்தது

2019 சட்டமன்றத் தேர்தலின் போது மகாராஷ்டிராவில் 8.98 கோடி வாக்காளர்கள் இருந்தனர். இது ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, 2024 மக்களவைத் தேர்தலின் போது 9.29 கோடியாக உயர்ந்தது. அடுத்து ஐந்தே மாதங்களில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின் போது 9.70 கோடி வாக்காளர்களாக அதிகரித்துள்ளது. அதாவது ஐந்து ஆண்டுகளில் 31 லட்சம் வாக்காளர்கள் கூடியுள்ளனர். அடுத்த ஐந்து மாதங்களில் 41 லட்சம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ தரவுகள் இதனைத் தெரிவிக்கின்றன. இந்த அதிகரிப்பை எப்படி நம்புவது? மகாராஷ்டிரா மாநில அரசின் மதிப்பீட்டின்படி, 18 வயதுக்கு மேற்பட்டோர் (அடல்ட்) 9.54 கோடி உள்ளனர். ஆனால் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் 9.70 கோடி வாக்காளர்கள் உள்ளனர்.

### 3. வாக்குப்பதிவு விழுக்காட்டை அதிகரித்தது

மகாராஷ்டிரா சட்டமன்றத் தேர்தலில் எப்பொழுதும் போலவே வாக்குப்பதிவு நடைபெற்றது. நீண்ட வரிசையில் நின்றும் வாக்களித்துவிட்டு வீட்டுக்குச் சென்றனர். மாலை 5 மணிக்குள் வரிசையில் நின்றவர்கள், காத்திருந்து அதன் பிறகு வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். ஆனால், வழக்கத்திற்கு மாறாக 5 மணிக்கு மேல் நீண்ட வரிசையிலோ, அலைமோதிய கூட்டமோ எந்த வாக்குச்சாவடியிலும் இருந்ததாக செய்திகளோ, அரசின் அறிக்கைகளோ இல்லை.

தேர்தல் ஆணையத்தின் தரவுகளின் படி, மாலை 5 மணிக்கு 58.22 சதவீதம் வாக்குப் பதிவாகி இருந்தது. அதன் பிறகும் வாக்குப்பதிவு அதிகரித்துக்கொண்டே சென்றது. அடுத்தநாள் காலையில், 66.05 விழுக்காடு வாக்குப் பதிவாகி இருப்பதாக தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதுவரை இல்லாத அளவுக்கு வாக்குப்பதிவு 7.83 விழுக்காடு அதிகரித்துள்ளது.

### 4. போலி வாக்குகள்

மகாராஷ்டிரா மாநிலத்தில் ஏறத்தாழ 1 லட்சம் வாக்குச்சாவடிகள் உள்ளன. கடந்த மக்களவைத் தேர்தலில் பாஜக மோசமாகத் தோல்வியடைந்த 85 தொகுதிகளில் உள்ள 12 ஆயிரம் வாக்குச்சாவடிகள் மட்டும் புதிய வாக்காளர்கள்




**மகாராஷ்டிரா வாக்குப்ப**

| ஆண்டு | வாக்குப்பதிவு (%) | இறுதி வாக்குப்பதிவு (%) |
|---|---|---|
| 2009 | 60.00 | 59.50 |
| 2014 | 62.00 | 63.08 |
| 2019 | 60.46 | 61.10 |
| 2024 | 58.22 | 66.05 |

சேர்க்கப்பட்டுள்ளனர், இந்த வாக்குச்சாவடிகள் ஒவ்வொன்றிலும் மாலை 5 மணிக்குப் பிறகு 600க்கும் மேற்பட்டோர் வாக்களித்திருக்க வேண்டும். ஒருவர் வாக்களிக்க ஒரு நிமிடம் எனக் கணக்கிட்டால், 600 பேர் வாக்களிக்க 10 மணி நேரம் தேவைப்படும். அப்படி எங்கும் நடக்கவில்லை. பிறகு எப்படி கூடுதல் வாக்குகள் பதிவாயின? இந்த 85 தொகுதிகளிலும் தேசிய ஜனநாயக கூட்டணி பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று இருக்கிறது.

மேற்கண்ட நான்கு அம்சங்களின் விளைவாக, 2024 சட்டமன்றத் தேர்தலில் பாஜக போட்டியிட்ட 149 தொகுதிகளில் 132ல் வெற்றி பெற்றுள்ளது. அதாவது 89 விழுக்காடு இடங்களைப் பிடித்துள்ளது. இதற்கு ஐந்து மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக 32 விழுக்காடு இடங்களையே பிடித்தது.

5. முறைகேடுக்கான ஆதாரங்களை மறைப்பது

2024 நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் சட்டமன்றத் தேர்தல்களுக்கான புகைப்படங்களுடன் கூடிய வாக்காளர் பட்டியலைக் கேட்டதற்கு, தேர்தல்

### ஜனநாயகத்துக்கு நல்லதல்ல!

“காங்கிரஸ் நாட்டின் முக்கிய எதிர்க்கட்சி. ராகுல்காந்தி மக்களவை எதிர்க்கட்சித் தலைவர். எனவே அவர் எழுப்பிய சந்தேகங்களுக்கு தேர்தல் ஆணையம் தெளிவாகப் பதிலளிக்க வேண்டும். அவர் பேட்டி மூலமாக தனது கருத்தை தெரிவிக்கவில்லை. செய்தித்தாளில் கட்டுரை மூலமாக, எழுத்து மூலமாக குற்றம்சாட்டியிருக்கிறார். தேர்தல் செயல்முறையின் நியாயத்தன்மை குறித்து மக்கள் மனதில் சந்தேகங்கள் இருந்தால் அது ஜனநாயகத்துக்கு நல்லதல்ல. எனவே தேர்தல் ஆணையம் முன்வந்து அனைத்து சந்தேகங்களையும் நீக்க வேண்டும்”

**ஜன் சுராஜ் கட்சியின் நிறுவனரும் வியூக வகுப்பாளருமான பிரசாந்த் கிஷோர் செய்தியாளர்களிடம் தெரிவித்தது.**

# விட்டதா தேர்தல் ஆணையம்?

## க்கும் அரசியலமைப்புக்கும் ஆபத்து

ஆணையம் கொடுக்க மறுத்துவிட்டது. அதைவிட மோசமானது, சட்டமன்றத் தேர்தலுக்குப் பின்னர் ஒரு மாதத்திற்குள், ஒரு வாக்குச்சாவடியில் நடந்த வாக்களிப்புக்கான சி.சி.டி.வி மற்றும் காணொளி காட்சிகளை வெளியிட உத்தரவிட்ட உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு மாறாக, ஒன்றிய அரசு தேர்தல் நடத்தை விதிகள் பிரிவு 93(2)(ணீ) ஐ திருத்தம் செய்தது. அண்மையில் ஒரே வாக்காளர் அடையாள அட்டை எண்கள் இருந்தது போலி வாக்காளர்கள் குறித்த கவலையை அதிகரித்துள்ளது.




### தேர்தல் ஆணையத்திற்குப் பதிலடி

“அன்புள்ள தேர்தல் ஆணையமே! நீங்கள் ஒரு அரசியல்சாசன அமைப்பு. கையொப்பமிடாத, தவிர்த்து செல்லும் குறிப்புகளை வெளியிடுவது தீவிரமான கேள்விகளுக்கு பதிலளிக்கும் வழி அல்ல. உங்களிடம் மறைக்க எதுவும் இல்லை என்றால், எனது கட்டுரையில் உள்ள கேள்விகளுக்குப் பதிலளித்து அதை நிரூபிக்க வேண்டும். மகாராஷ்டிரா உட்பட அனைத்து மாநிலங்களின் மக்களவை மற்றும் சட்டப்பேரவைகளுக்கான அண்மைத் தேர்தல்களுக்கான ஒருங்கிணைந்த, டிஜிட்டல் வாக்காளர் பட்டியலை வெளியிடுதல் மற்றும் மகாராஷ்டிரா வாக்குச்சாவடிகளில் மாலை 5 மணிக்குப் பிறகு அனைத்து சிசிடிவி காட்சிகளையும் வெளியிடுதல் வேண்டும். இதை தவிர்ப்பது உங்கள் நம்பகத்தன்மையைப் பாதுகாக்காது. உண்மையைச் சொல்வதுதான் பாதுகாக்கும்.”

**தேர்தல் ஆணையத்தின் விளக்க அறிக்கை குறித்து ராகுல்காந்தி கொடுத்திருக்கும் பதில்**

ஆணையம், இந்த உண்மைகள் அனைத்தையும் கடந்த ஆண்டு 2024 டிசம்பர் 24 ல் காங்கிரஸ் கட்சிக்கு அளித்த பதிலில் தெரிவித்திருந்தது. அவை தேர்தல் ஆணைய இணையதளத்திலும் உள்ளன. இது போன்ற குற்றச்சாட்டுகளை மீண்டும் மீண்டும் எழுப்பும் போது உண்மைகள் அனைத்தும் புறக்கணிக்கப்படுவதாக தெரிகிறது. வாக்காளர்களின் சாதகமற்ற தீர்ப்புக்கு பிறகு, தேர்தல் ஆணையம் சமரசம் செய்யப்பட்டுள்ளது என்று கூறி, அதன் மீது அவதூறு செய்ய முயற்சிப்பது முற்றிலும் அபத்தம்” என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

ராகுல் காந்தி தொடர்ந்து எழுப்பிக் கொண்டிருக்கும் கேள்விகளுக்கு தேர்தல் ஆணையம் உரிய விளக்கம் கொடுத்திருக்க வேண்டும். ராகுல் காந்தியின் புகார்களை சவாலாக ஏற்று, முறைகேடு நடைபெறவில்லை என்பதை மெய்ப்பித்திருக்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்யவில்லை.

சட்டத்தின் ஆட்சியை, ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் தன்னாட்சி அமைப்புகள் முக்கிய பங்காற்றுகின்றன. ஒன்றிய ஆட்சி அதிகாரத்திற்கு பாஜக வந்தது முதல் தன்னாட்சி அமைப்புகள் வளைக்கப்பட்டு விட்டன. தன்னாட்சி அமைப்புகள் அரசுத்துறைகளில் ஒன்றாகவோ, சங் பரிவாரின் இன்னொரு பிரிவாகவோ மாற்றப்படுவது சட்டத்தின் ஆட்சிக்கும் அரசியலமைப்புச் சட்டத்துக்கும் எதிரான பாசிசப் போக்காகும்.

இந்தப் பிரச்சனைக்கு தேர்தல் ஆணையத்திடம் முறையிடுவது, தேர்தல் பரப்புரையில் எடுத்துச்சென்று தீர்வு காண முயற்சிப்பது என்பதுதான் காங்கிரஸ் கட்சியின், ராகுல் காந்தியின் நம்பிக்கையாகவும் வழிமுறையாகவும் இருந்து வருகிறது. இதற்கு மாறாக, முறைகேடுகளை மக்களிடம் எடுத்துச் சென்று, மக்கள் இயக்கத்தைக் கட்டமைப்பதன் மூலம் தான் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இதற்கு ஜனநாயக, முற்போக்கு சக்திகள் முன்வர வேண்டும்.

| திவு |
| --- |
| வித்தியாசம் (%) |
| 0.50 |
| 1.08 |
| 0.64 |
| 7.83 |

தேர்தல் மோசடி என்பது சூதாட்ட விளையாட்டு போன்றது. இந்த ஆட்டத்தில் மோசடியான தரப்பு வெல்லலாம், ஆனால் அது ஜனநாயக அமைப்புகளையும் அதன் முடிவின் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் அழித்து விடும். மோசடியால் நடைபெறும் தேர்தல்கள், எந்த ஜனநாயகத்துக்கும் விஷமாகும்” இவ்வாறு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.

ராகுல் காந்தியின் புகார்களுக்கு தேர்தல் ஆணையம் பதிலளித்து அறிக்கை விடுத்தது. அதில், “வாக்காளர் பட்டியலுக்கு எதிராக எழுப்பியிருக்கும் இந்த ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் சட்டத்தின் ஆட்சியை அவமதிப்பது போன்றாகும். தேர்தல்

## பயங்கரவாதத் தாக்குதலைத் தேர்தலுக்குப் பயன்படுத்தும் பாஜக!



பஹல்காமில் மதத்தின் பெயரால் அப்பாவி மக்களை பயங்கரவாதிகள் படுகொலை செய்தனர். மக்களைக் கொன்றோரை முப்படையின் உதவியோடு மோடி அழித்தார். ஆபரேஷன் சிந்தூருக்குத் தமிழகத்திலிருந்து மிகப்பெரிய ஆதரவு கிடைத்தது. மறுபடியும் பயங்கரவாதிகள் வாலாட்டினால் அழிக்கப்படுவர் என்பதை நினைவூட்டுகிறேன் என்று நீட்டி முழங்கியுள்ளார். நமது கேள்வி காஷ்மீரில் தான் பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்து விட்டேன் என்று சண்ட மாருதம் செய்தவர். இப்போது எப்படி அங்கு பயங்கரவாதிகள் வந்தார்கள்? அதுவும் 300 கிலோ மீட்டர் தூரம் பயணித்துப் படுகொலைகளை நிகழ்த்திப் பத்திரமாக எப்படித் திரும்பினார்கள்? கும்பகர்ண தூக்கத்தில் இருந்ததா இந்திய அரசு? பாகிஸ்தானோடு போரை நடத்தியவர்கள் ட்ரம்ப் சொன்னவுடன் மறுவார்த்தை பேசாமல் ஏன் உடனடியாக நிறுத்தினார்கள். இந்தியாவின் பிரதமர் மோடியா ட்ரம்பா? என்ற கேள்விகளைத்தான் தமிழ்நாடு கேட்டுக் கொண்டிருக்கிறது. இது தெரியாமல் தமிழ்நாட்டில் ஏதோ இவர்களது செயல்களுக்கெல்லாம் ஆதரவு இருப்பதைப் போல மனிதர் அடித்து விட்டுக் கொண்டிருக்கிறார். ஐயோ பாவம்!

**த/லெ**

## வெள்ளை கவர்னருக்கு எதிராக தோழர்கள் வீசிய வெடிகுண்டு



தனி மனிதனானாலும் இயக்கமானாலும் நாட்கள் எனும் படிக்கட்டுகளில் ஏறிப் பயணித்துக் கொண்டிருக்கின்றனர்.

அந்தப் பயணத்தைச் சற்றுப் பின்னோக்கிப் பார்க்கையில் பயணத்தின் தடயங்கள் நாட்களில் படிக்கட்டுகளில் பதிந்திருப்பதைக் காணமுடிகிறது.

பிரிட்டிஷ் கம்பெனி ஆட்சிக் காலத்திலும் சுதந்திர இந்தியாவிலும் அப்படிப்பட்ட தடயங்களில் பதிவுகள் நிரம்ப இருக்கின்றன. ஒன்றுபட்ட ராமநாதபுரத்தில் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் மானாமதுரை பேரூராட்சி மன்றத் தலைவர் வெள்ளைய கவர்னர் ஆர்ச் பால்ட் நை என்பவருக்கு வரவேற்பு அளிக்க முடிவு செய்தார். தேசிய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் கொதித்தெழுந்தனர்.

தோழர்.எஸ்.முகமது அலி தலைமையில் இயங்கி வந்த தேசிய வாலிபர் மன்ற இளைஞர்கள் கோபம் கொண்டு செயலில் இறங்கினார்கள். பேரூராட்சி மன்றத்தில் வெடிகுண்டு வீசப்பட்டது. தோழர்கள் எம்.வி.சுந்தரம், எஸ்.முகமது அலி, துரைராஜ், சுபா.சண்முகம், கண்ணையா, சேதுபிள்ளை, எல்.எஸ்.கே.செல்லம், ஆதிமூர்த்திய பிள்ளை ஆகியோர் கைது செய்யப்பட்டுக் கொடுஞ்சிறையில் சித்திரவதைக்கு ஆளானார்கள். எவரும் சாட்சி சொல்ல முன்வரவில்லை. ஒன்றரை மாதக் காலம் ரிமாண்ட் கைதிகளாக வைக்கப்பட்டுப் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்கள். தோழர் எஸ்.முகமது அலி காங்கிரஸ் கட்சியில் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

பிற்காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து பணியாற்றத் தொடங்கியபோது அவர் சார்ந்திருந்த காங்கிரஸ் கட்சியினரால் பல இன்னல்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. அதை எல்லாம் பொருட்படுத்தாமல் கம்யூனிஸ்ட் கட்சியில் பணியாற்றி வந்தார். அவருக்கு இயக்கத் தோழர்கள் ஆதரவு அளித்து வந்தனர். மானாமதுரையின் கீழப்பசலை கிராமம் எம்.ஆதிமூலத்தை விவசாயிகள் சங்கத்திற்குக் கொடுத்தது. தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டார்.

1943ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் காலம் சென்ற பி.சீனிவாசராவ் அவர்களால் செங்கொடி ஏற்றி விவசாயிகள் சங்கம் துவக்கப்பட்டது. எம்.வி.சுந்தரம் முகமதலி ஆகியோர் கீழப்பசலையில் விவசாயிகள் சங்கம் அமைக்க உதவினர். எஸ்.எஸ்.ராமன், எஸ்.மகாலிங்கம் போன்ற எண்ணற்ற தியாகத் தோழர்கள் கீழப்பசலை விவசாயிகள் சங்கத்தில் பணியாற்றி விவசாயிகளின் கோரிக்கையை வென்றெடுத்து. அவர்களின் வாழ்வாதாரம் ஏற்றம் பெறச் செய்தனர்.

மண்பாண்டத் தொழிலாளர் பிரச்சனைக்காகவும், கூலி உயர்வுக்காகவும் போராட்டம் நடத்தினர். மண்பாண்டத் தொழிலாளர்கள் சங்கத்தின் தோழர் எம்.ஆர்.ஆண்டவன் செயலாளராக இருந்து போராட்டக் களத்தில் முன்நின்றார். குறைந்த கூலி பெற்று பொருளாதாரப் பிரச்சனைகளைச் சந்தித்துக் கொண்டிருந்த ஓடு உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் ஒன்று திரண்டு சங்கம் அமைத்தனர்.

அதற்கு எம்.வி.சுந்தரம், கே.எம்.சுந்தரம், ஏ.சீனிவாசன் ஆகியோர் வழிகாட்டுதலில் கோரிக்கைகளை வலியுறுத்தி இயக்கம் நடத்தி நியாயமான கூலி பெற்று வெற்றி கண்டனர். அச்சங்கத்தின் தலைவராக ஆர்.எச்.நாதன் வழிகாட்டியாகச் செயல்பட்டு வந்தார். 1948 இல் திருப்புவனத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டு கே.பி.சிவப்பிரகாசம், வி.பி. நடராஜன், பீமராஜன் ஆகிய மூன்று தோழர்கள் கொண்ட அமைப்பு உருவாக்கப்பட்டது.

திருப்புவனம் கிளையை வளர்ப்பதில் தோழர்கள் எம்.வி.சுந்தரம், ஆர்.எச்.நாதன், எம்.ஆதிமூலம், எஸ்.எஸ்.ராமன் ஆகியோர் வழிகாட்டியாக இருந்தனர். கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்ட காலத்தில் தலைமறைவு வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருந்த பலரில் ஏ.கே.கோபாலன் திருபுவனத்திற்கு ஆறு மைல் தொலைவில் உள்ள அம்பலத்தாடி என்ற கிராமத்தில் தங்கியிருந்தார்.

அங்கு பாழடைந்த கிணறு ஒன்று இருந்திருக்கிறது. தோழர்களை அழைத்து ஊர் மக்களைத் திரட்டி அந்தக் கிணற்றைச் சுத்தம் செய்து தூர்வாரும் பணியைத் தொடங்கினார். கூட்டு உழைப்பின் விளைவாக அந்தக் கிணறு குடிநீர்க் கிணறாக மாறியது. பின்னாளில் அவரின் நினைவாக அந்தக் கிணற்றை ஏ.கே.ஜி கிணறு என்று அந்த கிராமத்து மக்கள் அடையாளப்படுத்தி மகிழ்ந்தனர்.

தலைமறைவு வாழ்க்கையிலும் சமுதாய வாழ்க்கையைத் தொடர்ந்த தியாகிகள் இவரைப் போன்று நிறைய பேர் இருந்திருக்கிறார்கள். பின்னாளில் கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபடுகிற போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து முன்னணித் தலைவர்களில் ஒருவராகச் செயல்பட்டிருக்கிறார்.

மனிதப் பயணத்தில் தியாகத் தலைவர்களின் தடயங்கள் நிரம்ப இருக்கின்றன. அதனை முடிந்தவரை தெரிந்து கொண்டு இளைய தலைமுறையிடம் நாம் கொண்டு சேர்த்தால் அவர்களின் சமுதாய வாழ்க்கைக்கு உரமாக அமையும்.

**ராமநாதபுரம் மாவட்டக் கட்சியின் பொன்விழா ஆண்டு மலரில் (1975) மானாமதுரை தாலுகா செயலாளர் தோழர் எம்.வி.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் கட்டுரையிலிருந்து தொகுக்கப்பட்டவை.**

**த.மு.சிவகுமார்**

### 10 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற

# அனைத்து மாணவர்களையும் பிளஸ் 1 வகுப்பில் சேர்க்க வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

தமிழ்நாட்டில் 10 வகுப்புப் பொதுத் தேர்வில், தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகள் அனைவரையும் மேல்நிலைப் பள்ளிகளில் பிளஸ் 1 வகுப்பில் சேர்க்க வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்நாட்டில் 10 வகுப்பு பொதுத் தேர்வில் தேர்வு பெற்ற மாணவ, மாணவிகள், மேல்நிலைப் பள்ளிகளில் பிளஸ் 1 பயில சேர்ந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில் இளம் தலைமுறையின் கல்விக்காக தமிழ்நாடு அரசு காலை உணவுத் திட்டம் முதல் புதுமைப் பெண் திட்டம் வரை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம் இடைநிற்றல் பெருமளவு குறைந்து இருப்பதும், உயர்கல்வி சேர்க்கையில் மாணவிகள் எண்ணிக்கை அதிகரித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த கல்வி ஆண்டில் 10 வகுப்பு மாணவர் தேர்ச்சியில் 241 அரசுப் பள்ளிகளில் 100 சதவீத தேர்ச்சி பெற்று, சாதனை படைத்துள்ளது. இந்தப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களை அரசு பாராட்டி ஊக்கப்படுத்தியுள்ளது. இந்நிலையில் பிளஸ் 1 சேர்க்கைக்கு மாணவ, மாணவிகள் அரசு மேல்நிலைப் பள்ளிகளை அணுகும் போது, அவர்களது மதிப்பெண்களைப் பார்த்து, நிராகரிப்பதாகப் புகார்கள் எழுந்துள்ளன. உயர் மதிப்பெண்கள் பெற்றவர்கள் மட்டுமே சேர்க்க முடியும் என்ற நிலை அரசின் சமூக நீதிக் கொள்கைக்கு எதிரானது. பள்ளி மாணவர் சமூகத்துக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

தனியார் பள்ளிகள் சுய லாபம் தேடும் முயற்சியில் பரபரப்பான விளம்பரங்களை வெளியிட்டு, உயர் மதிப்பெண் பெற்றவர்களை மட்டுமே சேர்த்து வரும் முறை அரசுப் பள்ளிகளைத் தொற்றிக் கொள்ளும் முன்பு தமிழ்நாடு அரசு உடனடியாகத் தடுக்க வேண்டும். குறைந்தபட்ச மதிப்பெண் பெற்ற மாணவர்களை உயர் மதிப்பெண் பெறும் அளவில் உயர்த்துவதில்தான் கற்பிக்கும் திறன் மதிப்பிட வேண்டியது அவசியமாகும்.

வெறும் 100 சதவீதம் தேர்ச்சி என்ற கணக்கை மட்டும் கொண்டு கற்பிக்கும் திறனைத் தீர்மானிக்கக் கூடாது என்பதை தமிழ்நாடு அரசுக்குச் சுட்டிக்காட்டி, பிளஸ் 1 சேர்க்கைக்கு அரசு பள்ளிகளை அணுகும் மாணவ, மாணவிகள் அனைவரையும் அனுமதிக்க வேண்டும் என அரசுப் பள்ளிகளுக்கு உத்தரவு வழங்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு, தமிழ்நாடு அரசையும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சரையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# ஜனசக்தி வளர்ச்சி நிதி





◆ திருவாரூர் மாவட்டம் நன்னிலம் தாலுகா, கடுவன்குடி மானாங் தெரு, கல்யாணசுந்தரம் இல்ல புதுமனைப் புகுவிழா நிகழ்வில், தாமரைச்செல்வி, வினோத் மற்றும் நாகை, செல்லூர் மூத்த தோழர் சொக்கன் அவர்கள், மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் கோ. பாண்டியன் அவர்களிடம் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூபாய் 3000 வழங்கினார்.

◆ டாக்ட் சங்கத்தின் கோவை மாவட்ட துணைத் தலைவரும், கட்சியின் கோவை மாநகர் மேற்கு மண்டலம் இடையர்பாளையம் கட்சி கிளை துணைச் செயலாளருமான பி.கார்த்திகேயன் கே.பிரேமா இவர்களின் புதல்வி கே.பிரியங்கா ஆர்.அஜித்குமார் ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில், கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம் எக்ஸ் எம்எல்ஏ, மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட துணைச் செயலாளர் ஜே.ஜேம்ஸ், மாவட்டப் பொருளாளர் சி.தங்கவேல் மற்றும் இல.இராஜேந்திரன், ஜி.பிரதாப்சேகர், எம்.லீலாகிருஷ்ணன், மாநகராட்சி மன்ற சாந்திசந்திரன், மேற்கு மண்டலச் செயலாளர் என்.சந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார்கள். மணமக்களின் சார்பாக ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூபாய் 2500 வழங்கப்பட்டது.

# பொதுவுடைமை இயக்கச் சொத்து முத்து

கோவை மாவட்டம் சிங்காநல்லூர் வட்டாரத்தில் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராகவும் ஜனசக்தி நாளிதழின் விற்பனையாளராகவும் திறம்படச் செயல்பட்டவர் தோழர் முத்து. இவர் கோத்தாரி ஆலையின் செங்கொடி சங்கத்தில் தீவிர ஊழியராகவும் செயல்பட்டு வந்தார். முத்துவின் சங்கப் பணிகளுக்கு ஈடு கொடுக்க முடியாத தொழிற்சங்க விரோத சக்திகளால் அவர் ஆலைக்குள்ளேயே 1954 ஆம் ஆண்டு ஜூலை 7ஆம் நாள் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

முத்து போன்றவர்களின் அளப்பரிய தியாகத்தில் தோய்ந்த செங்கொடி இயக்கத்தை உயர்த்திப் பிடித்து வர்க்கப் போரை முன்னெடுத்துச் செல்வோமாக.

**(ஜூலை 7 : தியாகி முத்து நினைவு நாள்)**

**– பெரணமல்லூர் சேகரன்**

# மா சாகுபடி விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்



தமிழ்நாட்டில் மா சாகுபடி செய்துள்ள விவசாயிகள் விளைச்சல் அதிகரித்தும், உரிய விலை இல்லாது அவதிப்படுகின்றனர். அரசு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :

மா சாகுபடி செய்துள்ள விவசாயிகள் நடப்பாண்டு உரிய கட்டுப்படியான விலை இல்லாமல் பாதிப்பில் உள்ளனர். கடந்த சில ஆண்டுகளாக மாங்காய்கள் விளைச்சல் மிகக் குறைந்து விவசாயிகளைப் பாதித்தது. தற்பொழுது விளைச்சல் அதிகரித்தும், உரிய விலை இல்லாது அவதிப்படுகின்றனர். மா மரங்கள் வருடம் முழுவதும் பூத்து விளைச்சல் கூடுதலாகக் கிடைத்திட, கல்தர் என்கிற ஒரு மருந்தைப் பெரும்பகுதி விவசாயிகளிடம் தள்ளி விட்டு உபயோகப்படுத்தப்பட்டது. இம்மருந்து பயன்படுத்தப்பட்ட மாமரங்களின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு விளைச்சல் படுமோசமாகக் குறைந்தது. இதில் பெரிய அளவுக்கு விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இந்த மரங்களைப் பின்னர் பாதுகாக்கவே கூடுதல் செலவு செய்தனர்.

இந்தியாவின் 7 மாநிலங்களில் அதிகமாக விளையும் மாங்காய்கள் விளைச்சலில் 6வது இடத்தில் தமிழ்நாடு உள்ளது. இங்கு வருடத்திற்கு சராசரி 3 லட்சம் மெட்ரிக் டன் மாங்காய்கள் விளைகின்றன.

இந்நிலையில் நடப்பாண்டு மாங்காய்கள் கூடுதல் விளைச்சல் கண்டிருக்கிறது. மாம்பழக்கூழ் தயாரிக்கும் ஆலைகள் அரசிடம் இல்லை. கிருஷ்ணகிரியில் தனியார்களிடம் மட்டுமே 24 ஆலைகள் உள்ளன. இந்நிலையைப் பயன்படுத்தி வியாபாரிகள் மற்றும் மாம்பழக் கூழ் தயாரிக்கும் ஆலை உரிமையாளர்கள் கூட்டு சேர்ந்து விவசாயிகளிடம் கிலோ 3 மற்றும் 4 ரூபாய் விலைக்குக் கேட்பதால், மாங்காய்களைப் பறிக்காமலேயே விட்டு விடுகின்றனர். ஒரு டன் சராசரி 25 ஆயிரம் ரூபாய் விலைக்குக் கடந்த காலங்களில் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது.

கடந்த சில ஆண்டுகளில் இங்குள்ள மாம்பழக் கூழ் ஆலைகளுக்குப் போதுமான அளவு மாம்பழங்கள் கிடைக்காமல் கர்நாடகம், தெலுங்கானா, ஆந்திராவில் இருந்து வாங்கிய நிறுவனங்கள், தற்பொழுது தமிழ்நாட்டின் கூடுதல் உற்பத்தியைப் பயன்படுத்தி விவசாயிகளை வஞ்சிக்கின்றன. அரசின் ஆலைகள் இருந்திருந்தால் விவசாயிகளுக்குக் கொஞ்சம் பாதுகாப்பு இருந்திருக்கும்.

எனவே மா சாகுபடி விவசாயிகளைக் காத்திட தமிழ்நாடு அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை அவசரமாக மேற்கொள்ள வேண்டும்.

உடனடியாக மா சாகுபடி விவசாயிகள், மாம்பழக்கூழ் தயாரிக்கும் ஆலைகளின் உரிமையாளர்கள், வியாபாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசு உயர் அலுவலர்கள் உள்ளிட்ட முத்தரப்புக் கூட்டத்தை மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடத்தி, கட்டுப்படியான விலையை நிர்ணயித்துக் கொள்முதல் செய்திட வேண்டும்.

பாதிக்கப்பட்ட மா சாகுபடி விவசாயிகளுக்கு உடனடியாக உரிய அளவு நிவாரணத் தொகை வழங்கிட வேண்டும். ஒவ்வொரு பருவ நிலையிலும் விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்க, கூடுதல் மா சாகுபடி உள்ள இடங்களில் அரசு குளிர் பதனக் கிடங்குகளை அமைத்துத் தர வேண்டும். கட்டுப்படியான விலை கிடைக்க வேளாண் வணிகத்துறையை இதில் ஈடுபடுத்திட வேண்டும்.

தனியார்களிடம் மட்டுமே மாம்பழக் கூழ் தயாரிக்கும் ஆலைகள் உள்ளதால் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு இல்லை. எனவே தமிழ்நாடு அரசே மாம்பழக் கூழ் தயாரிக்கும் ஆலையைத் தொடங்கிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# துணைவேந்தர் நியமனத் திருத்தச் சட்டத்துக்குத் தடை குழப்பம் ஏற்படுத்தும் சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

துணைவேந்தர் நியமனத் திருத்தச் சட்டத்துக்குத் தடை விதித்துள்ள சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பு, குழப்பம் ஏற்படுத்தும் தீர்ப்பு என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.


தமிழ்நாடு ஆளுநர் பொறுப்பில் நியமனம் பெற்ற ஆரம்ப நாளிலிருந்து ஆர்.என். ரவி மலிவான அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்.

தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றி, ஒப்புதலுக்கு அனுப்பிய பத்துக்கும் மேற்பட்ட மசோதாக்களைக் கிடப்பில் போட்டு, மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்த முடியாத நெருக்கடியை ஏற்படுத்தி வந்த ஆளுநரின் பொறுப்பற்ற செயலைத் தடுக்க வேண்டும் என பிரதமர் மற்றும் குடியரசுத் தலைவர் ஆகியோரிடம் முறையிடப்பட்டது. இதன் மீது எந்த விளைவும் ஏற்படாத நிலையில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் ஏப்ரல் 8ஆம் தேதி வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்பளித்தது.

ஆளுநரின் உள்நோக்கம் கொண்ட எண்ணத்தை உணர்ந்து கொண்ட உச்ச நீதிமன்றம், அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஆளுநர் கிடப்பில் போட்டு, முடக்கி வைத்திருந்த 10 மசோதாக்களுக்கும் ஒப்புதல் அளித்துள்ளது. இதனைத் தொடர்ந்து சட்டங்கள் அமலாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, புதிய பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள் நியமனச் சட்டப்படி, துணை வேந்தர்கள் தேடுதல் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் பாஜக வழக்கறிஞர் தாக்கல் செய்த பொதுநல வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட, உயர் நீதிமன்றத்தின் விடுமுறை கால அமர்வு உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு இடைக்காலத் தடை விதித்துள்ளது. உயர் நீதிமன்றம் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட முறை, அரசு தரப்பு கேட்டுக் கொண்ட நியாயமான கால அவகாசம் தர மறுத்த விதம், அவசர அவசரமாக இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்த வேகம் அனைத்தும் ஆழ்ந்த சந்தேகத்தை ஏற்படுத்தி, அடுக்கடுக்கான வினாக்களை எழுப்புகிறது.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்து குடியரசுத் தலைவர் கடந்த 13 ஆம் தேதி 14 வினாக்களை எழுப்பி, அவைகளுக்கு விளக்கம் கேட்டு, உச்ச நீதிமன்றத்திற்கு எழுதியுள்ளார். இந்நிலையில் சென்னை உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் ஒப்புதல் வழங்கிய திருத்தச் சட்டத்திற்கு இடைக்கால தடை விதித்திருப்பது, குடிப்பங்களை ஏற்படுத்த வலிந்து மேற்கொள்ளப்பட்ட செயலாகும். நீதி பரிபாலன வரலாற்றில், சென்னை உயர் நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை தீராக் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# “எனது மதம் போலீஸ் யூனிபார்ம்”



நாட்டையே உலுக்கிய ஆசிஃபா வன்புணர்வு கொலை வழக்கில் சிறப்பு புலனாய்வு குழுவின் ஒரே பெண் அதிகாரியானஷ்வேதாம்பரி ஷர்மாவின் நேர்மை, துணிவு பாராட்டுக்குரியது.

அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது: குற்றவாளிகளில் பெரும்பாலோர் பிராமணர்களாக இருக்கிறார்கள். நாமெல்லாம் ஒரே ஜாதியை சார்ந்தவர்கள், ஒரே மதத்தை சார்ந்தவர்கள்.

ஒரு முஸ்லிம் பெண்ணின் வன்புணர்வு கொலையில் நமது பிராமணர்களை குற்றவாளிகளாக காட்டக்கூடாதென பல வழிகளில் எனக்கு அழுத்தம் கொடுத்தார்கள்.

ஒரு போலீஸ் அதிகாரி என்ற முறையில் நான் அவர்களிடம் சொன்னேன் “எனக்கு மதமில்லை, என்னுடைய ஒரே மதம் எனது போலீஸ் யூனிபார்ம் தான்” என்று.

அவர்களது எல்லா தந்திரங்களும் எங்களிடம் எடுபடாததால், அவர்களது குடும்பத்தார்களும், ஆதரவாளர்களும் மிரட்டவும் அச்சுறுத்தவும் செய்தார்கள். கம்புகளை எடுத்து வந்தார்கள். பயங்கரமாக கோஷமிட்டார்கள். மூவர்ணக்கொடியோடு ஊர்வலங்கள் நடத்தினார்கள். பல கிராமங்களுக்கான சாலைகளை அடைத்தார்கள்.

கடைசியில் நீதிமன்றத்தையும் மறித்தார்கள். ஜாமின் மனுக்கள் விசாரணைக்கு வரும்போதெல்லாம் வழக்கறிஞர்கள் கும்பலாக கோஷமிட்டு மிரட்டி அச்சுறுத்தினார்கள். நீதிமன்றத்திற்கு வெளியேயும் அச்சுறுத்தும் கும்பல்கள் நிறைந்திருக்கும்.

சில காவல்துறையினரும் குற்றவாளிகளுக்காகவே இருந்தார்கள்.

ஒருவிதமான சட்டமற்ற தன்மையையும் பீதியையும் நிறைத்து வைத்திருந்தார்கள். ஆனால், அமைதியாகவும் உறுதியாகவும், அர்ப்பணிப்புணர்வோடு எங்கள் பணிகளை தொடர்ந்தோம்.

நீதித்துறையின் மீது எங்களுக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. அனைத்துவிதமான ஆதாரங்களோடும் சாட்சிகளோடும் எங்களது விசாரணை நிறைவடைந்துள்ளதால், நீதி நிலைக்குமென நம்புகிறோம்”.

அயோக்கிய சங்கி கூட்டம் தமிழ்நாட்டில் 5 மாதங்களில் பாலியல் வழக்கில் தீர்ப்பு கிடைத்தாலும் வதந்தி பரப்பி மக்களிடம் பீதியை கிளப்புகிறார்கள்.

8 வயது குழந்தைக்கு நடந்த குற்றத்திற்கு நீதியை கிடைக்க விடாமல் தடுக்க போராடும் சங்கி கூட்டம் எவ்வளவு குரூரமானவர்கள் என்பது வெட்ட வெளிச்சம்.

# ஊதிய இழப்பைத் தவிர்க்க மகாராஷ்டிராவில் 843 பெண் தொழிலாளர்கள் கர்ப்பப்பை அகற்றம்



மோடி பிரதமராக ஆன பின்பு நாட்டில் வறுமை மிக மோசமான அளவில் வாட்டி வருகிறது. பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகவும், ஏழைகள் மேலும் ஏழைகளாகவும் மாறிவிட்டனர். குறிப்பாக வறுமைக்கோடு அதலப் பாதாளத்திற்குச் சென்றுவிட்டது.

இத்தகையச் சூழலில் பாஜக கூட்டணி ஆளும் மகாராஷ்டிரா மாநிலத்தில் ஊதிய இழப்பைத் தவிர்ப்பதற்காக 843 பெண் தொழிலாளர்களுக்குக் கர்ப்பப்பையை அகற்றிய அதிர்ச்சிச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. உத்தரப்பிரதேசம், தமிழ்நாட்டைப் போன்று மகாராஷ்டிரா மாநிலம் பீட் மாவட்டத்தில் கரும்பு விவசாயம் மிக முக்கியமானதாகும். ஒரு வருடத்தில் 78,000 பெண்கள் உட்பட 1.75 லட்சம் தொழிலாளர்கள் கரும்பு அறுவடையில் ஈடுபடுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி காலத்தில் மகாராஷ்டிராவின் பெரும்பாலான மாவட்டங்களில் இருந்து தொழிலாளர்கள் பீட் மாவட்டத்தின் கரும்பு வயல்களில் வேலை செய்ய வருகின்றனர். 6 மாதங்கள் வேலை செய்த பிறகு டிசம்பர், ஜனவரி மாதங்களில் அவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்புகின்றனர். இந்நிலையில், பீட் மாவட்டத் தில் 30 முதல் 35 வயதுடைய 843 பெண்கள் கரும்பு அறுவடை வேலைக்குச் செல்வதற்காகவும், ஊதிய இழப்பைத் தவிர்ப்ப தற்காகவும் தங்களது கருப்பையை அகற்றியுள்ளனர்.

இதுதொடர்பாக மாநிலச் சுகாதாரத்துறையின் அறிக்கை மூலம் வெளியான தகவலில், கரும்பு அறுவடை வேலைக்கு முன்பும் பின்பும் பெண்கள் சுகாதாரத் துறையினரால் முழுமையான உடல் பரிசோதனை செய்யப்படுகின்றனர். இதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட அறிக்கையில்தான் 843 பெண் தொழிலாளர்களுக்குக் கர்ப்பப்பை அகற்றப்பட்ட அதிர்ச்சியூட்டும் விவரங்கள் வெளியாகியுள்ளன.

பிரசவம் மற்றும் மாதவிடாய் காரணமாக வேலைக்குச் செல்லாமல் விடுப்பு எடுக்க நேர்ந்தால் வருவாய் குறையும் என்பதால் இந்த முடிவை எடுத்துள்ளனர். மேலும் 1,523 கர்ப்பிணித் தொழிலாளர்கள் ஊதியம் பறிபோய் விடும் என்ற அச்சத்துடன் அரிவாள் உள்ளிட்ட கூர்மையான ஆயுதங்களை கையில் வைத்துக் கடினமான சூழ்நிலைகளில் கரும்பு வயல் களில் வேலை செய்துள்ளனர். இந்தப் பெண்கள் அனைவரும் தாய் மற்றும் குழந்தைப் பராமரிப்பு போர்டில் பதிவு செய்யப் பட்டுள்ளனர்.

குறிப்பாகக் கரும்பு அறுவடை வேலைக்குச் செல்லும் பெண் தொழிலாளர்கள் பல்வேறு உடல் நலப் பிரச்சனைகளை எதிர்கொண்டுள்ளனர். எடுத்துக்காட்டாக, 3,415 பெண்கள் பி12 மற்றும் போலிக் அமிலக் குறைபாட்டால் இரத்தச் சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் தலசீமியா, மாதவிடாய் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், அறுவை சிகிச்சை அல்லது பிற நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுகாதாரத்துறை குழுக்கள் 1,132 கிராமங்களில் பணியாற்றி, கரும்பு அறுவடைக்குச் சென்ற 46,231 பெண்களைப் பரிசோதித்துள்ளன. அவர்களின் சுகாதார அட்டைகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. 15,624 அரசு மருத்துவர்களின் அனுமதியுடன் 279 அறுவை சிகிச்சைகள் தனியார் மருத்துவமனைகளில் செய்யப்பட்டுள்ளன.

# கோவை மாவட்ட மாநாட்டின் வரவேற்புக் குழு கூட்டம்




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட 25வது மாநாட்டின் வரவேற்புக் குழு அமைப்புக் கூட்டம், மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி தலைமையில் பெரியநாயக்கன்பாளையத்தில் நடைபெற்றது. சிவகணேஷ் வரவேற்றுப் பேசினார். இதில் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம் எக்ஸ் எம்.எல்.ஏ, மாவட்ட துணைச் செயலாளர்கள் ஜெ.ஜேம்ஸ், எம்.குணசேகரன், மாவட்டப் பொருளாளர் சி.தங்கவேலு, கே.எம்.செல்வராஜ் உள்ளிட்ட மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதில் வரவேற்புக் குழு தலைவராக சிவகணேஷ், செயலாளராக இராமமூர்த்தி, பொருளாளராக ஜெகநாதன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

# ஒரு பஞ்சவர்ணக்கிளியும் சில பாசிசக் கழுகுகளும்



பிணம் தின்னிக் கழுகுகளுக்கு
மாமிசத்தின் மீது அலாதிப் பிரியம்
மனிதர்களுக்கு...?
மன்னிக்கவும்..!
பாசிஸ்ட்களுக்கு..!

அதுவும் ஜியோனிச பாசிஸ்ட்களுக்கு?
அரேபிய இளம் கன்றுகளின் மாமிசம்
இனிக்கிறதோ?
உலகம் இதை ரசிக்கிறதோ?

அந்த அரேபிய ரோஜாக்களின்
முகத்தில் வழிவது ரத்தம் அல்ல?
நாளைய உலக அவலத்தின் கண்ணீர்!

பாலஸ்தீனத்தின்
காய சண்டிகைகளின்
பசிக்குரல்
பாலைவனத்தையே
பரிதவிக்கச் செய்கிறது!

ஐயோ மனிதர்களே!
உங்கள் உள்ளம் பதறாதோ?
உதிரம்தான் கொதிக்காதோ ?

பாரத தேசத்து மணிமேகலையின்
அட்சயப் பாத்திரம் வற்றிப்போனதோ?
அபலைகளின் பசியைப் போக்காத
காமதேனுக்களை
கசாப்புக் கடைக்கு அனுப்புங்கள்!

56 இன்ச் மார்பளவு தையல்காரன்
அளவெடுக்க உதவுமே தவிர
அடுத்தவர் பசி போக்க உதவாதா?

பாரதத் தாயே!
அவமானப்படுகிறோம்!
கோழைகளையா உன் சிம்மாசனத்தில்
கொலு வைத்திருக்கிறோம்..?

வீரம் என்பது
செஞ்சினத்தின் இரத்தச் சிவப்பு!
சங்கிகளுக்கு அது வெறும் நடிப்பு!!
இது காலம் உணர்த்திய கணிப்பு!!!

– என்.எஸ்.பிரதாப் சந்திரன்

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் 75வது ஆண்டு பவள விழா




◆நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் பவள விழா ஆண்டின் தொடக்கத்தை முன்னிட்டு, கோவை கிளை வளாகத்தில் புதிய நூல்களின் வெளியீட்டு விழா கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலப் பொருளாளர் ப.பா.ரமணி தலைமையில் நடைபெற்றது. என்.சி.பி.எச்.ஆர்.ரங்கராஜன் வரவேற்புரை வழங்கினார்.

வலசை, சேரி, கடைசி நெருப்புக் குச்சி, ஒரு காலனியில் ஒரு ராணி, போராளி ராஜம் கிருஷ்ணன், இந்தியவியல் முன்னோடி பேரா.ரா.விஜயலட்சுமி, தமிழ் மருத்துவத்தின் சிறப்பும் சிதைவும் ஆகிய நூல்களை முறையே கே.எம்.செல்வராஜ், தொல்லியல் அறிஞர் ர.பூங்குன்றன், எழுத்தாளர் சு.வேணுகோபால், முனைவர் இரா.செல்வி, முனைவர் மோ.செந்தில்குமார், எழுத்தாளர் மரு.மு.ந.புகழேந்தி ஆகியோர் வெளியிட்டனர். நிகழ்வில் கட்சியின் மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி உள்ளிட்ட சிறப்பு அழைப்பாளர்கள் பங்கேற்றனர். கிளை மேலாளர் சர்மிலி நன்றி கூறினார்.

◆ நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் 75ஆம் ஆண்டு பவளவிழாவை முன்னிட்டு, திருச்சி சிங்காரத்தோப்பு கிளை அலுவலகத்தில், மண்டல மேலாளர் கா.சுரேஷ் வரவேற்புரை நிகழ்த்தினார். கட்சியின் மத்தியக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் ம.செல்வராசு தலைமையில் புத்தக வெளியீட்டு விழா நடைபெற்றது.

நிகழ்வில் வே.பார்த்திபன் எழுதிய சோழநாட்டு நடுகற்கள் நூலை, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ் வெளியிட இணைப் பேராசிரியர் முனைவர் அ.செல்வராசு பெற்றுக் கொண்டார்.

உதவி பேராசிரியர் முனைவர் சதீஷ்குமார் புத்தக வெளியீட்டு விழாவைத் தொகுத்து வழங்கினார். இதில் கிளை மேலாளர் ச.நடராஜன் நன்றியுரை கூறினார்.

### திருச்சி ஏர்போர்ட் பகுதி

## குடியிருப்புகளைப் பாதுகாக்கப் போராடியோர் வழக்கிலிருந்து விடுதலை



திருச்சி ஏர்போர்ட் பகுதியில் குடியிருந்த மக்களை, ஏர்போர்ட் விரிவாக்கத்திற்காக, அப்புறப்படுத்த துணிந்த மாவட்ட நிர்வாகத்தைக் கண்டித்தும், குடியிருந்த மக்களுக்கு மாற்று இடம் வழங்கக் கோரியும், ஏர்போர்ட் பகுதி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் ராஜா தலைமையில், கலெக்டர் அலுவலகம் அருகே நடைபெற்ற போராட்டத்திற்காக வழக்கு தொடுக்கப்பட்டு ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் க.சுரேஷ், தரைகடை சிறுகடை வியாபாரிகள் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.அன்சர்தீன், கட்சியின் பொன்மலைப் பகுதி செயலாளர் சுந்தர்ராஜ் உள்ளிட்ட 75 பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, திருச்சி மாவட்டக் குற்றவியல் நீதித்துறை இரண்டாவது நீதிமன்றத்தில் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வந்ததில், 2025 ஜூன் 5 ல் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரையும் நீதிபதி வழக்கில் இருந்து விடுவித்தார். வழக்கறிஞர் எம்.செல்வகுமார் சிறப்பாக வாதிட்டு வழக்கிலிருந்து விடுதலை பெற்றுக் கொடுத்துள்ளார்.

### நூறு நாள் வேலை இடத்தில்

## பாம்பு கடித்து இறந்தவருக்கு 10 லட்சம் நிவாரணம்: விதொச கடிதம்

இதுகுறித்து தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கப் பொதுச்செயலாளர் அ.பாஸ்கர் தமிழக முதல்வருக்கு எழுதியுள்ள கடிதம் பின்வருமாறு :

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், வில்லியரம்பல் கிராமத்தில் உள்ள அய்யனார் கோவில் அருகில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டப் பணியில் வேலை செய்து கொண்டிருந்த, பூபதி மனைவி புஷ்பாவை (52) 05.06.2025 அன்று பணித் தளத்தில் பாம்பு கடித்துள்ளது.

பாம்பு கடித்த புஷ்பாவை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல எந்த ஏற்பாடும் அங்கு இல்லை. தகவல் அறிந்த அவரது கணவர் பா.பூபதி சம்பவ இடத்துக்குச் சென்று, புஷ்பாவை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

இந்த காலதாமத நேரத்தில் புஷ்பாவின் உடலில் பாம்பின் விஷம் பரவி, அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளார்.

இந்தத் தவறுக்கு அதிகாரிகளின் அலட்சியப் போக்கும் காரணம் எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அதிகாரிகள் அலட்சியப்போக்கைதமிழ்மாநிலவிவசாயத் தொழிலாளர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. பணித் தளத்தில் பாம்பு கடிபட்டு உயிரிழந்த புஷ்பாவிற்கு இரண்டு மகள்களும் ஒரு மகனும் உள்ளனர். எனவே பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு ரூ.10 லட்சம் இழப்பீடு தர வேண்டும். இவ்வாறு கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் விருதுநகர் மாவட்ட மாநாட்டுத் தயாரிப்புக் கூட்டம்



கட்சியின் விருதுநகர் மாவட்ட 25வது மாநாடு, வருகின்ற ஜூலை 3, 4 தேதிகளில் நடைபெற உள்ளது. அதற்கான திட்டமிடலும், தயாரிப்பு தொடர்பாக விருதுநகர் மாவட்ட நிர்வாகக் குழு மற்றும் இடை கமிட்டிச் செயலாளர்கள் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் ராமசாமி, மாவட்டச் செயலாளர் பி.லிங்கம், மாநிலக் குழு உறுப்பினர்கள் பாலமுருகன், செந்தில் குமார், மாவட்டப் பொருளாளர் எஸ்.பழனிக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதில் மாநாட்டைச் சிறப்பாக நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

### கோவை பாரதிபுரத்தில்

## ஏஐஒய்எப் சார்பில் சித்திரைத் திருவிழா



சூலூர் ஒன்றியத்திற்குட்பட்ட பாரதிபுரத்தில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் சார்பில், 22ஆம் ஆண்டு சித்திரைத் திருவிழா நடைபெற்றது. பெருமன்றக் கொடியினை வட்டாரச் செயலாளர் கே.ஜி.பவன்குமார் ஏற்றினார். விளையாட்டுப் போட்டிகளை மாதர் சம்மேளன ஈ.ரேவதி, ர.தமிழ்செல்வி துவக்கி வைத்தனர்.

விளையாட்டுப் போட்டிகள், கராத்தே நிகழ்ச்சி, வள்ளி கும்மியாட்டம், குழந்தைகளின் நடன நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டன. கவிதைப் போட்டி நடைபெற்றது. மாணவர்கள், இளைஞர்கள் கவிதை வாசித்தனர். ஆசிரியர் ப.இளங்கோ, தமிழ்ப் பேராசிரியர் மு.சௌந்தராஜன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். ஏஐடியுசி என்.சோமசுந்தரம், ஜனசக்தி இரா.கணேசன் ஆகியோர் நினைவுப் பரிசு வழங்கினர்.

பரிசளிப்புப் பொதுக்கூட்டம் வீ.பேரின்பம் தலைமையில் நடைபெற்றது. கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பெ.மௌனசாமி, இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் மௌ.குணசேகர், கட்சியின் வட்டாரச் செயலாளர் வே.வசந்தகுமார், ஏஐடியுசி மாவட்டப் பொருளாளர் பி.சுப்பிரமணியம், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாநிலச் செயலாளர் அ.அசரப் அலி, கட்சியின் வட்டாரப் பொருளாளர் கே.கண்ணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர். கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர் கே.புருசோத்தமன் சிறப்புரையாற்றினார். ஏ.ஆர்.சுப்பிரமணியம் நன்றி கூறினார்.

### மாணவர் பெருமன்றத்தின் சட்டப் போராட்டம் வெற்றி

## தேர்வு எழுத அனுமதி வழங்கி நீதிமன்றம் தீர்ப்பு!



காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டுப் பல்கலைக்கழகத்தில் பயின்று வரும் அஸ்லாம், சையத், நஹல் ஆகிய மூன்று மாணவர்கள் கல்வி நிலையத்தில் ஜெய்பீம், ப்ரீ பாலஸ்தீன் என்று எழுதியதற்காக இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

தேர்வு கால கட்டத்தில் தகுதி நீக்கம் செய்யப்பட்ட மாணவர்கள் நலனைப் பாதுகாக்க அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் சார்பில், சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், மாணவர்கள் இடைநீக்கம் செய்யப்பட்ட உத்தரவிற்கு இடைக்கால தடை விதித்தும் மேலும், மாணவர்கள் தடை இன்றிப் பயிற்சியில் பங்கேற்கவும், தேர்வு எழுதவும் அனுமதி வழங்கி உத்தரவிட்டது. இந்த வழக்கை அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் முன்னாள் மாநில நிர்வாகக் குழு உறுப்பினரும், ஐ.ஏ.எல் வடக்கு மண்டலப் பொறுப்பாளருமான ப.மோ.சுபாஷ் முன்னேடுத்து இடைக்கால உத்தரவு பெற்றுத் தந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகச் சுற்றுச்சூழல் தினத்தில் மரக்கன்றுகள் நடும்விழா



உலகச் சுற்றுச்சூழல் தினமான ஜீன் 5ம் தேதி திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 23வது வார்டு மாநகராட்சி நடுநிலைப்பள்ளி உறையூர் கிழக்கில் பள்ளி வளாகம் மற்றும் கீழ சாராயப்பட்டரை தெருப் பகுதிகளில் மூன்று இடங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டன. இந்நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ்குமார், வட்டாரக் கல்வி அலுவலர் இ.ஜேம்ஸ், பள்ளியின் தலைமை ஆசிரியை பொறுப்பு ம.செசிலி, ஆசிரியர் அமுதா, சுகாதார மேற்பார்வையாளர் மோகன்ராஜ், வேதா வார்டு மேனேஜர் மகேந்திரன் மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடன் மரக்கன்றுகள் நடும் நிகழ்வுகள் நடைபெற்றன.

## ஜூலை 9 பொது வேலைநிறுத்தம் அனைத்துத் தொழிற்சங்கத் தயாரிப்புக் கூட்டம்

அனைத்துத் தொழிற்சங்கங்களின் கூட்டம் 02.06.2025 அன்று சென்னை தொமுச அலுவலகத்தில் தொமுச தலைவர் கி.நடராசன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தொமுச சார்பில் கோ.சி.வள்ளுவன், ஜெ.விஜயகுமார், ஆ.சீ.அருணகிரி, ஏஐடியுசி சார்பில் ம.இராதாகிருஷ்ணன், எஸ்.காசிவிஸ்வநாதன், சிஐடியு சார்பில் ஜி.சுகுமாரன், சார்பில் எச்எம்எஸ் மா.சுப்ரமணியபிள்ளை, ஐஎன்டியுசி சார்பில் டி.வி.சேவியர், பா.சுகுமாரன், ஏஐயூடியூசி சார்பில் வி.சிவகுமார், ஈ.சடையாண்டி, ஏஐசிசிடியு ஏ.எஸ்.குமார் யுடியுசி அ.சேக்கிழார், டியுசிசி எஸ்.மாயாண்டி, எம்எல்எப் கி.வெங்கடேசன், டபுள்யுபிடியுசி இரா.சம்பத், எல்எல்எஃப் க.பேரறிவாளன் உள்ளிட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் பங்கேற்றனர்.

ஜூலை 9 ஆம் தேதி பொது வேலை நிறுத்தம் தமிழ்நாட்டில் முழு வெற்றி பெறச் செய்வதற்கான மே 20 ஆம் ஆர்ப்பாட்டம், ஜூன் 2 ஆம் தேதி ஆலை வாயில் மற்றும் பரப்புரை இயக்கங்களைச் சிறப்பாக நடத்திய, பங்கேற்ற அனைத்துத் தோழர்களுக்கும் பாராட்டுதல்கள் தெரிவிக்கப்பட்டன.

மேலும் 2025 ஜூன் 15 முதல் 20 ஆம் தேதிக்குள்ளாக மண்டல அளவிலான கலந்துரையாடல் கூட்டங்களை நடத்த வேண்டும். பொது வேலை நிறுத்தச் செய்தியும் ஒவ்வொரு தொழிலாளியையும், பொதுமக்களையும் சென்றடையும் வகையில் வாயில் கூட்டங்கள், தெரு முனைக் கூட்டங்கள் மற்றும் பாதயாத்திரை, ஜீப், சைக்கிள் இருசக்கர வாகன யாத்திரை போன்ற வடிவங்களிலும் விரிவான பரப்புரை இயக்கம் மேற்கொள்ள வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## நியூ செஞ்சுரி பள்ளியில் பணி நிறைவு விழா




நியூ செஞ்சுரி மேனிலைப் பள்ளியில் 31 ஆண்டுகளாகப் பணிபுரிந்த சுசீலா கோபிநாதன் பணி ஓய்வு பெற்றார். அவருக்கு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மேலாண்மை இயக்குநர் க.சந்தானம் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கி வாழ்த்திப் பேசினார். பள்ளி முதல்வர் புவனேஸ்வரி, மேனேஜர் முத்துகுமாரசாமி மற்றும் ஆசிரியர் பெருமக்களும் பள்ளியில் நடந்த இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவரைப் பாராட்டிப் பேசினர்.

## இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் 71வது அமைப்பு தினம்



இந்திய மாதர் தேசிய சம்மேளனம் திருப்பூர் புறநகர் மாவட்டம் மாதர் தேசிய சம்மேளனம் 71வது அமைப்பு தினக் கூட்டம் ஈஸ்வரி தலைமையில், கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.மாதர் சம்மேளனத்தின் கொடியை புக்குளம் மூத்த தோழர் சரஸ்வதி ஏற்றினார்.

கூட்டத்தில் மாதர் சம்மேளனத்தின் மாவட்ட தலைவர் கே.சித்ரா, மாவட்டச் செயலாளர் பி.நதியா, மாவட்ட துணைச் செயலாளர் ஏ.பேபி, மாவட்டக் குழு உறுப்பினர் என்.சாவித்திரி, உடுமலை தாலுகா செயலாளர் எஸ்.பாப்பாத்தி, பல்லடம் ஜி.ஜீவா ஆகியோர் மாதர் சம்மேளன வரலாறு குறித்தும், இன்றைய அரசியல் சூழ்நிலை குறித்தும், மாதர் சம்மேளனத்தின் எதிர்காலக் கடமைகள் குறித்தும் விளக்கிப் பேசினர்.

◆ மாதர் சம்மேளனத்தின் 71வது அமைப்பு தினத்தை முன்னிட்டு, மணிகண்டம் ஒன்றியம் சோமரசம்பேட்டை அலுவலகத்தில், ஒன்றியப் பொருளாளர் எம்.ரஜியாபேகம் தலைமையில், கட்டடச் சங்க மாவட்ட துணைச் செயலாளர் எம்.மருதாம்பாள் மாதர் சங்க கொடியினை ஏற்றி வைத்து உரையாற்றினார்.



நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.முத்துலெட்சுமி, ஒன்றியச் செயலாளர் பி.வித்யா, உள்ளாட்சிச் செயலாளர் ஜெ.நதியா, இளைஞர் பெருமன்ற ஒன்றியச் செயலாளர் ஏ.இன்னசென்ட் விமலா மேரி ஆகியோர் உரையாற்றினர். கட்சியின் மணிகண்டம் ஒன்றியச் செயலாளர் எம்.ஆர்.முருகன் வாழ்த்திப் பேசினார். ஒன்றியத் தலைவர் டி.நிர்மலா நன்றி கூறினார்.

## அகில இந்தியப் பொது வேலைநிறுத்த விளக்க தெருமுனைப் பிரச்சாரம்




நாமக்கல் மாவட்டத்தில் மத்தியத் தொழிற்சங்கங்களின் சார்பில், ஜூலை 9 அகில இந்தியப் பொது வேலை நிறுத்தம் மற்றும் மறியல் போராட்ட விளக்க தெருமுனைப் பிரச்சாரம் ஏஐடியூசி மாவட்டப் பொதுச்செயலாளர் பி.தனசேகரன் தலைமையில் நடைபெற்றது. இதில் என்.முருகராஜ் ஏஐடியூசி அரசு போக்குவரத்துக் கழக சம்மேளன மாநில இணைப் பொதுச் செயலாளர் என்.முருகராஜ், சிஐடியு மாவட்ட செயலாளர் என்.வேலுச்சாமி, ஐஎன்டியூசி மாவட்ட தலைவர் பன்னீர்செல்வம் ஆகியோர் பிரச்சார இயக்கத்தில் கலந்து கொண்டனர்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இடைக் கமிட்டி மாநாடுகள்


கோவில்பட்டி


மதுரை


நிலக்கோட்டை


பாளையங்கோட்டை

**மதுரை தெற்கு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு விழா மற்றும் மதுரை தெற்குப் பகுதிக் குழு 7வது மாநாடு ஜெய்ஹிந்புரத்தில் வி.தானு மலையான், ஏ.பாட்ஷா, எம்.முத்து லெட்சுமி தலைமையில் நடைபெற்றது. ஏ.மாடசாமி கொடியேற்றினார்.

மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.முருகன், மாநிலக் குழு உறுப்பினர் பி.ராஜலெட்சுமி, மாவட்ட துணைச் செயலாளர் சி.தாமஸ், மாவட்டக் குழு உறுப்பினர் ஆர்.ஜெயராமன், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் ஏ.பழனி முருகன் பங்கேற்றனர்.

தெற்குப் பகுதிச் செயலாளராக எம்.பாலமுருகன், துணைச் செயலாளராக ஜி.பாலன், எம்.முத்துலெட்சுமி, பொருளாளராக பி.முனீஸ்வரி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**மதுரை வடக்கு:** பகுதி குழு மாநாடு மார்க்கண்டேயன், ஆறுமுகம், கற்பகவல்லி தலைமையில் நடைபெற்றது. மாநாட்டை வாழ்த்தி மாதர் சம்மேளனத்தின் மாநிலச் செயலாளர் மு.கண்ணகி, மாவட்ட நிர்வாகிகள் எம்.எஸ்.முருகன், சி.தாமஸ், எம்.இருளாண்டி, மாதர் சங்க மாவட்டச் செயலாளர் பா.ராஜலெட்சுமி ஆகியோர் பேசினர். மதுரை வடக்குப் பகுதிச் செயலாளராக பி.வீரணசிங்கம், துணைச் செயலாளர்களாக திருப்பதி, கார்த்திகேயன், பொருளாளராக கற்பகவல்லி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**லால்குடி ஒன்றியம்:** திருச்சி புறநகர் மாவட்டம் லால்குடி ஒன்றிய 26வது மாநாடு லால்குடி கிழவிதியில் சினிவாசன், மணிகண்டன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

மாநாட்டுக் கொடியை மூத்த தோழர் சினிவாசன் ஏற்றினார். மாநாட்டைத் தொடங்கி வைத்து, புறநகர் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் அண்ணாதுரை உரை நிகழ்த்தினார். ஒன்றியச் செயலாளராக சப்தரிசியும், துணைச் செயலாளர்களாக மணிகண்டன், திவ்யா நாதன், பொருளாளராக முருகேசனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய நிர்வாகிகளை அறிமுகம் செய்து புறநகர் மாவட்டச் செயலாளர் ராஜ்குமார் உரை நிகழ்த்தினார்.

அன்பில், லால்குடியில் அரசு கட்டி முடித்த மருத்துவமனையை உடனே திறக்க வேண்டும். லால்குடி புதிய பேருந்து நிலையக் கட்டுமானப் பணியை விரைந்து முடிக்க வேண்டும் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**பாளையங்கோட்டை ஒன்றியம்:** 2வது மாநாடு திருவேங்கடநாதபுரத்தில், மூத்த தோழர் கே.எஸ். பாலு தலைமையில் நடைபெற்றது. கட்சியின் நெல்லை மாவட்டச் செயலாளர் ஆர்.சடையப்பன் சிறப்புரையாற்றினார்.

வேலை அறிக்கையை முன்வைத்து ஒன்றியச் செயலாளர் கே.முத்துகிருஷ்ணன் பேசினார். தாலுகா செயலாளராக வி.பரமசிவன், துணைச் செயலாளராக, கே.எஸ்.பாலு, எம்.நவராஜ் மோசஸ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். திருவேங்கடநாதபுரம் பஞ்சாயத்துப் பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அனைத்து இல்லங்களுக்கும் வழங்க வேண்டும்.

பாளையங்கோட்டை ஒன்றியத்துக்கு உட்பட்ட சாலைகளைச் சீரமைக்க வேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**நிலக்கோட்டை தாலுகா:** 13வது மாநாடு வத்தலகுண்டு தா.பாண்டியன் நினைவரங்கத்தில் நடைபெற்றது. மாநாட்டை மாவட்டச் செயற்குழு உறுப்பினர் ராஜாமணி துவக்கி வைத்தார். மாவட்டத் துணைச் செயலாளர் இரா.வினோத்குமார் வாழ்த்துரை வழங்கினார். மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன் நிறைவுரையாற்றினார். இதில் தாலுகா செயலாளராக ஏ.அல்லிமுத்து, துணைச் செயலாளர்களாக சகாயம், காசிமாயன், பொருளாளராக ஆல்பர்ட்ராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**சிவகாசி வட்டம்:** விருதுநகர் மாவட்டம் மீனம்பட்டியில் கட்சியின் சிவகாசி வட்ட 25வது மாநாடு லிங்கம், முனியசாமி, ரவி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மூத்த தோழர் முத்தையா கொடியை ஏற்றினார். சுரேஷ்குமார் வரவேற்றார். மாநாட்டைத் தொடங்கி வைத்து, மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்.பி பேசினார். தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்.எல்.ஏ நிறைவு செய்து பேசினார். மாநிலக் குழு உறுப்பினர்கள் செந்தில்குமார், பாலமுருகன், மாவட்ட துணைச் செயலாளர் சமுத்திரம், மாவட்டப் பொருளாளர் பழனிக்குமார், விதொச வரதராஜன் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

செயலாளராக கலைவாசன், துணைச் செயலாளர்களாக டிமிட்ரோ, ரவி, பொருளாளராக முனியசாமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். பட்டாசுத் தொழிலையும், தொழிலாளர்களையும் பாதுகாக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நகரச் செயலாளர் இக்பால் நன்றி கூறினார்.

**கோவில்பட்டி நகரம்:** கட்சியின் கோவில்பட்டி நகர 33வது மாநாடு ஜீவா இல்லத்தில், பஞ்சாலை ஏஐடியுசி செயலாளர் பரமராஜ், சிபிஐ நகர உதவிச் செயலாளர்கள் முனியசாமி, அலாவுதீன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. நகரக் குழு உறுப்பினர் சண்முகவேல் கட்சிக் கொடியேற்றினார். நகரச் செயலாளர் சரோஜா அறிக்கை சமர்ப்பித்தார். திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் சிறப்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர் கரும்பன், இளைஞர் பெருமன்ற மாநிலச் செயலாளர் க.பாரதி, சிபிஐ மாவட்ட துணைச் செயலாளர் பாபு, மாவட்டக் குழு உறுப்பினர் செல்லையா, நகரப் பொருளாளர் ராஜு உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். நகரச் செயலாளராக செந்தில் ஆறுமுகம் தேர்வு செய்யப்பட்டார்.

கோவில்பட்டி அரசு மாவட்ட மருத்துவமனையில் எம்.ஆர்.ஐ ஸ்கேன் வசதி, மஞ்சள் காமாலை பரிசோதனை வசதிகளை ஏற்படுத்த வேண்டும். மருந்துகள் தட்டுப்பாடின்றிக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கோவில்பட்டியில் செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**மணப்பாறை நகரம்:** கட்சியின் மணப்பாறை நகர மாநாடு சுப்ரமணியன், மனோன்மணி, மரியராஜ் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியை மூத்த தோழர் ராகமத்துனிஷா ஏற்றிவைத்தார். மாநாட்டைப் புறநகர் மாவட்டச் செயலாளர் ராஜ்குமார் தொடங்கி வைத்தார். வேலை அறிக்கையை நகரச் செயலாளர் ஜனசக்தி உசேன் சமர்ப்பித்தார்.

கட்சியின் புறநகர் மாவட்டத் துணைச் செயலாளர் பழனிசாமி, மணப்பாறை தெற்கு ஒன்றியச் செயலாளர் ராஜேந்திரன், வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் பெருமாள், வையம்பட்டி ஒன்றியச் செயலாளர் தங்கராஜி ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

நகரச் செயலாளராக தங்கமணி, துணைச் செயலாளர்களாக திருநாவுக்கரசு, தங்கராஜ், பொருளாளராக மாரியராஜ் ஆகியோர் தேர்ந்தெடுக்கபட்டனர். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் துணைச் செயலாளர் இந்திரஜித் நிறைவு உரை நிகழ்த்தினார்.

**திருவாடுதுறை கிளை:** முப்பதாவது கிளை மாநாடு கிடாரங்கொண்டானில் நடைபெற்றது. நகரச் செயலாளர் பழக்கடை செல்வம் கொடி ஏற்றினார். மாநாட்டை வாழ்த்தி மாவட்டக் குழு உறுப்பினர்கள் எம்.ஏ.மாரியப்பன், செயற்குழு உறுப்பினர் வி.தர்மதாஸ், அன்னபாக்கியம் ஆகியோர் பேசினார்கள். கிளைச் செயலாளராக ஆர்.இளம்பரிதி தேர்வு செய்யப்பட்டார்.

# நூல் நயம்

## திராவிடமும் தமிழ் தேசியமும்




இன்றைய தமிழக அரசியல் சூழலில் திராவிடத் தேசியம், தமிழ்த் தேசியம் என்கின்ற குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கி இருக்கிறது. இதில் முரண் என்னவென்றால் தமிழ்த் தேசியத்திற்கு, பகை முரண் திராவிடத் தேசியம் என்பதைப் போன்ற ஒரு சித்திரம் கட்டமைக்கப்படுகிறது. தமிழ்த் தேசிய அழிவிலிருந்துதான் திராவிடத் தேசியம் பிறந்தது அல்லது தமிழ்த் தேசியத்தை அழிப்பதற்காகப் பேசப்படுகிற ஒரு தேசியம்தான் திராவிடத் தேசியம் என்கின்ற குரல் ஒலிக்கிறது. இந்தக் குரல் மக்கள் மத்தியில் இருந்து இயல்பாக வருகிறதா என்றால் அதுவும் இல்லை? மாறாக திராவிடத் தேசியத்தின் பகைமுரண் ஆரிய தேசியத்தின் அடிவருடிகளின் குரலாகவே தமிழ்த் தேசியம் என்கிற குரல் ஒலிக்கிறது.

தமிழ்த் தேசியம் என்கின்ற குரல் தன்னை மொழி ரீதியாகவும், இன ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அடக்கி, சுரண்டும் ஆரிய தேசியத்திற்கு எதிராக ஓங்கி ஒலிக்க வேண்டிய குரல். ஆனால் அந்தக் குரலை புத்திசாலித்தனமாக, திராவிடம் பேசுவோருக்கு எதிராகத் திசை திருப்பப்படுகிறது என்பதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டிய தருணம் இது.

இந்தச் சூழ்நிலையில்தான் பகை முரண் எது, நட்பு முரண் எது என்பதை விளக்கமாக இந்நூல் பேசுகிறது. தமிழகத்தை எல்லா வகையிலும் சுரண்டி ஆதிக்கம் செலுத்த முனையும் ஆரிய தேசியமே நமக்குப் பகைமுரண் உடையது. அவற்றை எதிர்த்து நிர்மூலமாக்க வேண்டியது நமது தலையாய பணியாகும்.

மனிதகுலம் அடுத்த கட்டத்தை நோக்கி முன்னேறுவதற்கு வர்க்கப் போராட்டமே பிரதானமாகும். சுரண்டும் வர்க்கத்தை ஒழித்து, தொழிலாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றினால் ஒழிய மனித குலத்திற்கு விடிவில்லை. மனித குல விடுதலைக்குச் சர்வதேசியமே முன்தேவையாகும். இதைத்தான் நமது முன்னோர் “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்று குறிப்பிட்டனர். அப்படிப்பட்ட அறிவார்ந்த மரபில் வந்த நம்மைத்தான் சிலர் உழக்குக்குள் கிழக்கும், மேற்கும் பார்க்கும் சண்டையில் இழுத்து விடுகின்றனர். இவர்களிடத்தில் இருந்து நாம் கவனமாக இருக்க வேண்டும் என்பதை இந்நூல் வலியுறுத்திப் பேசுகிறது.

– இன்சுவை பாரதி

நூலாசிரியர் : இளசை கணேசன்
பக்கம் : 122 விலை : 160
வெளியீடு : புரட்சி பாரதி பதிப்பகம், எண்.1ஏ, மோரை புலிக்குத்தி கிராமம், ஆவடி, சென்னை–55

## வியட்நாம் கம்போடியா, லாவோஸ் வீரத்தின் விளைநிலம்




வியட்நாம் வீரத்தின் விளைநிலம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். உலகத்தையே ஆட்டிப்படைக்கும் ஏகாதிபத்திய நாடான அமெரிக்காவையே புறமுதுகிட்டுஓட வைத்தபெருமைவியட்நாம் மக்களையே சாரும். சீனாவில் மன்னராட்சி நடைபெற்ற போது அவர்கள் வியட்நாம் மண்ணையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்கள். வியட்நாம் மக்கள் அதை எதிர்த்துக் கடுமையான முறையில் போராடினார்கள். அதன் பிறகு பிரான்ஸ் நாடு நூறாண்டுகளுக்கு மேலாக வியட்நாமை ஆண்டது. அதன் பிறகு 15 ஆண்டுகளுக்கு மேலாக ஜப்பான் வியட்நாமை ஆண்டு கொண்டிருந்தது. அதை எதிர்த்து மக்கள் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் போராடிய போது, அது ஒரு கம்யூனிஸ்ட் நாடாக உருவாகி விடக்கூடாது என்பதற்காக அமெரிக்கா இந்தப் போரில் தலையிட்டது. அப்போது வியட்நாம் மக்கள் புரட்சி வீரர் ஹோசிமின் தலைமையில் அமெரிக்காவைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தனர் வியட்நாம் மக்கள்.

ஆனால் இதற்காக வியட்நாம் மக்கள் சந்தித்த விளைவுகள் ஏராளம். ஏஜென்ட் ஆரஞ்சு என்ற ரசாயன அரக்கன் நிகழ்த்திய கொடூரங்களால் எத்தனையோ லட்சம் மக்கள் செத்து மடிந்த பிறகும், ஏஜென்ட் ஆரஞ்ச் தன் மிச்சத்தைப் பிறக்காத குழந்தைகளிடமும், அடுத்த தலைமுறைகளிடமும் இன்னமும் கடத்திக் கொண்டே இருக்கிறது. நேபாம் மற்றும் பாஸ்பரஸ் குண்டுகளின் பயன்பாடுகளால் இன்றைக்கும் கண்கள் பிதுங்கி, கை கால்கள் மடங்கி, உருவம் குலைந்து குழந்தைகள் பிறக்கின்றன.

அதே அவலம்தான் இன்றைக்கும் பாலஸ்தீனத்திலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். இந்தப் பின்னணியில் வியட்நாம் கம்போடியா போன்ற இடங்களில் தான் கண்டவற்றை சுவைபடத் தொகுத்துள்ளார் நூலாசிரியர்.

– சமரன்

நூலாசிரியர் : டி.ரமேஷ்
பக்கம் : 170 விலை : 180
வெளியீடு : மணிமேகலை பிரசுரம், 21, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை – 17

# குரலற்ற மக்களின் குரலாக ஒலிப்பது கம்யூனிஸ்ட் கட்சி

## நாகர்கோவிலில் கே.சுப்பராயன் எம்.பி பேச்சு





கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட மாநாடு நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கே.சுப்பராயன் எம்.பி பேசியதாவது :

‘‘உலகில் கம்யூனிஸ்ட் கட்சி தோன்றி 177 ஆண்டுகள் ஆகின்றன. கம்யூனிஸ்ட் கட்சி தவிர 177 ஆண்டுகள் உயிரோடு இருக்கின்ற கட்சிகள் என்று உலகத்தில் எந்தக் கட்சியும் இல்லை. இந்த 177 ஆண்டுகளில் பல நாடுகளில் லட்சக்கணக்கான கம்யூனிஸ்டகள் கொல்லப்பட்டுள்ளனர். பலர் தூக்கிலிடப்பட்டார்கள், வர்க்க எதிரிகளால் படுகொலை செய்யப்பட்டார்கள். துப்பாக்கித் தோட்டாக்களுக்குப் பலியானார்கள். ஏன் பல நாடுகளில் இன்றும் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருக்கிறது.

நம்முடைய கட்சி என்பது பிற கட்சிகளைப் போல வெறும் நாடாளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சி அமைப்புகளில் அங்கம் பெறுவதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட கட்சி அல்ல. நமது கட்சி நடைமுறையில் இப்பொழுது நிலவுகிற இந்தச் சமூக அமைப்பைத் தகர்த்து, அந்த இடத்தில் அனைத்து மக்களின் நலன்களையும் பேணுகிற, அனைத்து மனிதர்களின் தேவைகளையும் நிறைவு செய்கிற, ஒரே முறையைக் கொண்ட ஒரு சமூக அமைப்பை உருவாக்குவதற்குத்தான் நாம் கூடி உள்ளோம். உலகம் முழுவதும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

கன்னியாகுமரியில் மாநாட்டுக்காகக் கொடி கட்டிய போது, காவல்துறையால் ஏற்பட்ட இடர்பாடுகள் குறித்துக் கட்சியின் மாவட்டச் செயலாளர் பேசினார்.

ஒரு செங்கொடியை நடைபாதையில் கட்டுவதற்குக் கூட அனுமதி இல்லை என்றால் என்ன பொருள்? திமுக மாநாடு நடத்தினால் இப்படித்தான் நடத்துவார்களா? நான் வழி முழுக்கப் பார்த்தேன். எல்லா தெருக்களிலும் திமுக கொடி பறந்து கொண்டுதான் இருக்கிறது. அங்கே போலீஸ் எதுவும் செய்யவில்லை. ஏன் இங்கே மட்டும் செங்கொடியை அனுமதிக்க மறுக்கிறார்கள்? அதற்கும் வரலாற்று ரீதியாகக் காரணங்கள் இருக்கின்றன. அவற்றைப் புரிந்து கொண்டால்தான் நாம் ஏன் கம்யூனிஸ்ட் கட்சியில் இருக்க வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

மார்க்ஸ் அன்றே எச்சரித்தார், கம்யூனிஸ்ட்களை எதிர்ப்பதில் முதலாளித்துவம் முழு மூச்சாகச் செயல்படும் என்று. நாம் ஏன் ஒதுக்கப்படுகிறோம் என்றால் நாம் நேர்மையானவர்கள் என்பதால், கோடிக்கணக்கான குரலற்ற மக்களின் குரலாக ஒலிப்பதால் நாம் வெறுக்கப்படுகிறோம். தடை செய்யப்படுகிறோம். குரல் அற்றவர்களுக்கு இந்தக் கட்சிதான் குரல். இந்தக் கட்சியின் மூலம்தான் குரல் அற்றவர்களின் குரல் ஒலிக்கிறது’’ என்று பேசினார்.

இம்மாநாட்டில் மாவட்டச் செயலாளர் சுபாஷ் சந்திர போஸ், ஏஐஒய்எப் மாநிலச் செயலாளர் பாரதி, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலத் தலைவர் எஸ்.கே.கங்கா, முன்னாள் தலைவர் சொக்கலிங்கம், தோழர்கள் அருணாச்சலம், அருள் குமார், ராஜூ, சுரேஷ் மேசியா தாஸ், நாராயணப் பெருமாள், சொக்கலிங்கம், பேராசிரியர் சுந்தரம், சுகுமாரன், சந்திரன் கல்யாணசுந்தரம் அருணாச்சலம், தாமரை சிங், டாஸ்மாக் ராமகிருஷ்ணன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாதாந்திரச் சிறப்புக் கூட்டம்



தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற திருப்பூர் வடக்கு மாநகர் கிளையின், மாதாந்திரச் சிறப்புக் கூட்டம் பி.கே.ஆர்.இல்லத்தில் கிளை துணைத் தலைவர் மேரி நிர்மலா தலைமையில் நடைபெற்றது. செயலாளர் அ.பழனி வரவேற்புரை ஆற்ற, மாநிலக்குழு உறுப்பினர் எல்.ஐ.சி.சிவராமன் மன்றப் பாடலைப் பாடினார்.

சசிகலா தளபதி விஜயராஜா எழுதிய ‘அன்பின் வழியது’ நாவலை அருண்குமார் மதிப்புரை செய்தார். கன்னட எழுத்தாளர் அரவிந்த மாலகத்தியின் தன் வரலாற்று நூலான ‘கவர்ன்மெண்ட் மாப்பிள்ளை’ நூலின் வாசிப்பு அனுபவத்தை ஆசிரியர் கதிரேசன் பகிர்ந்து கொண்டார். மாவட்டச் செயலாளர் ஏ.வி.பழனிச்சாமி வாழ்த்திப் பேசினார். கவிஞர்கள் காங்கேயன், முனைவர் மேரி ரோஸ்லின் கவிதை வாசித்தார்கள். திருக்குறள் ஒப்புவித்த இரண்டாம் வகுப்பு மாணவன் பி.ஏ.நௌனிஷ், பத்தாம் வகுப்புத் தேர்வில் 497 மதிப்பெண் பெற்ற அரசுப் பள்ளி மாணவன் வீரமணிகண்டன் மற்றும் சிந்துவெளி குறியீடுகளைக் கொண்டு கோலங்கள் வரையும் எழுத்தாளர் தங்கம், ரமேஷ் ஆகியோருக்கு திருப்பூர் துணைமேயர் எம்கேஎம் ஆர்.பாலசுப்ரமணியம் விருது வழங்கினார். பெருமன்றத்தின் மாவட்டத் தலைவர் பி.ஆர்.நடராஜன் வாழ்த்திப் பேசினார். துருவன் பாலா, சித்தன், சிவராமன் ஆகியோர் பாடல்கள் பாடினர். சங்கீதா பிரகாஷ் நன்றியுரை நவின்றார்.

## வி.தொ.ச. மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்

1 ஆம் பக்க தொடர்ச்சி



தருமபுரி



கள்ளக்குறிச்சி


கறம்பக்குடி



விழுப்புரம்


திருச்சி



கொடைக்கானல்


துறையூர்



கோவை


கரூர்

விவசாயச் சங்க மாவட்டச் செயலாளர் எஸ்.சின்னசாமி, ஏஐடியூசி மாநிலத் துணைத்தலைவர் கே.மணி, ஏஐஒய்எப் மாவட்டச் செயலாளர் எம்.நவீன்குமார் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார்கள்.

### திருச்சி

லால்குடியில் நடைபெற்ற போராட்டத்தில் மாநிலப் பொதுச் செயலாளர் பாஸ்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

### துறையூர்

தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் திருச்சி மாவட்டம் துறையூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்றியத் தலைவர் எம்.கணேசன் தலைமை தாங்கினார். யோகேஸ்வரி, எம்.ராஜலிங்கம், தேவிகா அலமேலு, அமுதா, எல்லம்மாள், ராஜேந்திரன் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தின் நோக்கங்களை விளக்கி மாவட்டச் செயலாளர் பி.கணேசன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியச் செயலாளர் எஸ்.சேகர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய துணைச் செயலாளர் சி.செல்வம் ஆகியோர் பேசினார்கள். ஆர்ப்பாட்டத்தில் 350 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### கொடைக்கானல்

கொடைக்கானல் ஒன்றியத்தின் சார்பாக கொடைக்கானல் ஒன்றிய அமைப்பாளர் மகாலிங்கம் தலைமையில் மூஞ்சிகல்லில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### கரூர்

கரூரில் தலைமைத் தபால் அலுவலகம் முன்பு, சங்கத்தின் மாவட்டத் தலைவர் பி.பாலன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நிர்வாகிகள் மெம்பர் கந்தசாமி, சி.சென்னப்பன், கே.ரத்னா, எஸ்.பராசக்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தின் கோரிக்கைகளை விளக்கி சங்கத்தின் மாவட்டச் செயலாளர் ஆர்.தங்கவேல் பேசினார். ஆர்ப்பாட்டத்தை வாழ்த்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் கே.என்.நாட்ராயன், மாவட்டப் பொருளாளர் ஆர்.ராஜேந்திரன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### திருச்சி

திருச்சி மாவட்டத்தில் லால்குடி ஒன்றியத்தில் பின்னவாசல் பாலம் அருகில் வி.தொ.ச ஒன்றியச் செயலாளர் பழனிவேல்ராஜான், தலைவர் ராஜவேலு ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் மாநிலப் பொதுச்செயலாளர் அ.பாஸ்கர் மாவட்டச் செயலாளர் பி.கணேசன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார்கள்.

### கறம்பக்குடி

கறம்பக்குடியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு விதொச ஒன்றியச் செயலாளர் காத்தலிங்கம் தலைமை தாங்கினார். மாநிலக் குழு உறுப்பினர் உ.அரசப்பன் துவக்க உரையாற்றினார். பாலகிருஷ்ணன், முருகப்பா, மருதமுத்து, சந்திரேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### கோவை

கோவையில் சங்கத்தின் தலைவர் திருமதி.சுப்பம்மாள் தலைமை தாங்கினார். சங்கத்தின் அமைப்பாளர் துரைசாமி மற்றும் ஏஐடியூசி தொழிற்சங்க மாவட்டச் செயலாளர் தங்கவேல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அன்னூர் ஒன்றியச் செயலாளர் செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

### பருவாச்சி

பருவாச்சியில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் பவானி ஒன்றியச் செயலாளர் தி.கண்ணன் தலைமையில் நடைபெற்றது. எஸ்.கந்தசாமி ஏ.ஐ.டி.யு.சி கட்டிடத் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளர், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் கே.பி.நட்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம்

விழுப்புரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு N.நாராயணன் மாவட்டச் செயலாளர் தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் S.M.தனம் செழியன், மாவட்டப் பொருளாளர் K.கலீல்கான், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் S.ராமச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் L.ஜூலி, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் D.அரசு உள்ளிட்டோர் உரையாற்றினார்கள். ஆர்ப்பாட்டத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் விழுப்புரம் மாவட்டச் செயலாளர் சௌரிராஜன் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார். 25 பெண்கள் உட்பட 75 பேர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

## தருமபுரியில் மாற்றுக் கட்சியினர் 100க்கும் மேற்பட்டோர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தர்மபுரி மாவட்ட நிர்வாகக் குழு மற்றும் மாவட்டக் குழு கூட்டம் 4, 5 தேதிகளில் பாரதிபுரத்தில் அரூர் நகரச் செயலாளர் பா.முருகன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி கலந்து கொண்டு பேசினார்.

அப்போது தருமபுரி மாவட்ட புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் புகழேந்தி தலைமையில், அக்கட்சியைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர். இதில் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.தேவராசன், தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்க மாநிலச் சிறப்புத் தலைவர் ந.நஞ்சப்பன், மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

# தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

(AIBEA- உடன் இணைக்கப்பட்டது)

## 24வது மாநில மாநாடு

நாள்: ஜூன் 22 - 23, 2025

இடம்: தோழர் M.S. தாவூத் நினைவு மண்டபம்

தோழர் N.சம்பத் நினைவு அரங்கம், ஐஸ்வர்யா மஹால், அரும்பாக்கம், சென்னை.

### துவக்க உரை:

தோழர் **ராஜன் நாகர்** தலைவர் AIBEA

### தலைமை:

தோழர் **C.H.வெங்கடாசலம்** அவைத்தலைவர், TNBEF

### வாழ்த்துரை

தோழர் **B.S.ராம்பாபு** செயலாளர், AIBEA

தோழர் **M.ராதாகிருஷ்ணன்** பொதுச் செயலாளர், AITUC-TN

தோழர் **M. ஜெயநாத்** இணைச் செயலாளர், AIBEA

தோழர் **B. ராம்பிரகாஷ்** இணைச் செயலாளர், AIBEA

தோழர் **V. உதயகுமார்** இணைச் செயலாளர், AIBEA

தோழர் **ஷியாம் சுந்தர் தவே** இணைச் செயலாளர், AIBOA

தோழர் **A.R. சுஜித் ராஜு** கன்வீனர், தனியார் வங்கி சங்கங்களின் குழு

### சிறப்பு விருந்தினர்

தோழர் **J. சாலமன்** பொதுச் செயலாளர் NUBE, மலேசியா

தோழர் **D.B. கார்த்திக்** உதவிச் செயலாளர், CBEU, ஸ்ரீலங்கா

அனைவரும் வருக

**S.D.ஸ்ரீனிவாசன்**
செயலாளர், TNBEF

**E.அருணாச்சலம்**
பொது செயலாளர், TNBEF

Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: T.M.Murthi, Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.